Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 07

புதன்கிழமை
03 டிசெம்பர் 2025

கார்த்திகை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

புதன்பொய்கை

## அஸ்வெசும புதுப்பிப்பு அவகாசம் நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 3
அஸ்வெசும வருடாந்தத் தகவல் புதுப்பிப் புக்காக வழங்

»15

டித்வா புயல் பேரழிவு

# 500ஐ நெருங்குகின்றது உயிரிழப்பு எண்ணிக்கை

கொழும்பு, டிசெம்பர் 3

டித்வா புயல் பேரழிவு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 465ஆக அதிகரித்துள்ளது என்றும், 366 பேரைக் காணவில்லை எனவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

»15

டித்வா புயல் மீட்பு நடவடிக்கை

## மனிதாபிமான உதவிகளுக்கு இந்தியா பெரும் இடையூறு!

பாகிஸ்தான் பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெம்பர் 3
டித்வா புயலால் பேரழி வுக்கு உட்பட்டுள்ள இலங் கைக்கு, பாகிஸ்தானில் இருந்து அனுப்பப்படும் மனிதாபிமான உதவி களை இந்தியா தடுத்து வருகின்றது என பாகிஸ் தான் குற்றஞ்சாட்டியுள் ளது.
பாகிஸ்தான் வெளிவிவ கார அமைச்சகம், இந்த விடயம் தொடர்பில்

»16

இலங்கைக்கான உதவிகள் தொடர்பில்

## பாகிஸ்தானின் கருத்து மிகவும் அபத்தமானது

இந்தியா மறுப்பு

கொழும்பு, டிசெ. 3
இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவ தற்கு இந்தியா வான்வழி அனுமதி வழங்காமல் இடை யூறு வழங்குகின்றது என பாகிஸ்தான் முன்வைத்த குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.
இலங்கைக்கான மீட்பு நடவடிக்கைகளில் இந்தியா ஆர்வத்துடனும் ஆத்மார்த்த

»16

பாதிப்புக் குறைந்த மாவட்டங்களில்

## டிசெ. 16ஆம் திகதி முதல் பாடசாலைகள் இயங்கும்

கொழும்பு, டிசெ. 3
நாட்டின் அசாதாரண கால நிலையால் குறைந்த பாதிப் புகளை எதிர்கொண்ட மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள், டிசெம்பர் மாதம் 16ஆம் திகதிமுதல் இயங்கும் என்று கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.
கல்வி அமைச் சின் செய

»15

டித்வா பேரழிவால்

## வெள்ளத்தில் சிக்கிய வீடுகளை சுத்தம்செய்வதற்கு 25,000 ரூபா!

கொழும்பு, டிசெ. 3
டித்வா சூறாவளியால் ஏற் பட்ட வெள்ளப்பேரிடர் சிக் கிய வீடு அல்லது சொத்துக் களை சுத்தம் செய்வதற் காக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அர சாங்கம் அறிவித்துள்ளது.
இந்தப் பணிகளுக்காக 10 ஆயிரம் ரூபா வழங்கப்ப டும் என்று ஜனாதிபதி

»15

## ஜனவரி மாதத்திலேயே உயர்தரப் பரீட்சைகள்!

கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 3
நாட்டில் நிலவிய மோச மான வானிலை காரண மாக நடத்த முடியாமற் போன உயர்தரப் பரீட்சை களை ஜனவரி மாத ஆரம் பத்தில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சின்

»15



## திருநெல்வேலி கொலை; 6 சந்தேகநபர்கள் கைது

சிறைக்குள் வைத்தே திட்டம்
தொடர்கின்றன விசாரணைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 3
யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் இளைஞர் ஒருவர் வீதியில் துரத்தித் துரத்தி வெட்டிப் படுகொலை செய்யப் பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் இருவர் தலைமறைவாகியுள் ளனர். கைதானவர்களிடம் முன்னெ டுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப் படையில், கொலைச் சம் பவம் சிறையில் தடுத்து

»15



முரச்சந்தி முரளி
'கைகாலை எடுக்கிறதெல்லாம் ஏதோ கடையில சாமான் வாங்கிற மாதிரி இஞ்ச சகஜமாப் போட்டுது கண்டியளோ'

## முன்னாள் அமைச்சர் ரத்நாயக்க மறியலில்

கொழும்பு, டிசெ. 3
முன்னாள் அமைச்சர் ரத்நாயக்க கைது செய் யப்பட்டு, விளக்கமறிய லில் வைக் கப்பட்டுள்

»15

## நாடாளுமன்றத்தில் இன்று மீண்டும் பட்ஜெட் விவாதம்

கொழும்பு, டிசெ. 3
நாடாளுமன்றத்தில் இன்று மீண்டும் பட்ஜெட் விவாதம் இடம்பெறவுள்ளது.
வர்த்தகம், உணவுப் பாது காப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் தோட்டத் தொழில் கள் மற்றும் சமூக உட்கட்ட மைப்பு உள்ளிட்ட அமைச் சுக்களுக் கான செல

»16

பேரிடரால் பாதிக்கப்பட்ட

## மக்களுக்கு உணவளிப்பது யார்? கிராமசேவகர் – உறுப்பினர் முரண்

யாழ்ப்பாணம், டிசெ. 3
உடுவில் பிரதேச செயல கத்துக்கு உட்பட்ட சுன்னா கம் பகுதியில், வெள்ளப் பேரிடரால் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு உணவளிப்பது தொடர்பில் பிரதேசசபை உறுப்பின ருக்கும், கிராம அலு

»16

## எய்ட்ஸால் பெரும்பாலும் இளவயதினரே பாதிப்பு!



வவுனியா, டிசெ. 3
வவுனியாவில் இதுவரை 43 பேர் எயிட்ஸ் நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள னர். அவர்களில் பலர் இளவ யதினர் என்று வவுனியா மாவட்ட பாலியல் நோய் மற் றும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டத்தின் பொறுப்பதிகாரி மருத்துவர்

»16

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் தொடர் போராட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 3
தையிட்டியில் சட்டவிரோத மாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதி ராக மீண்டும் இன்றும் நாளையும் போராட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.
தையிட்டியில் சட்டவிரோத

»16



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## வெள்ளத்திலிருந்து தப்பிய வடமராட்சிக் கிராமங்கள்!

யாழ்ப்பாணம்,டிசெ.3

தொண்டைமானாறு பாலத்தின் வான் கதவுகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடருக்கு முன்பதாக திறக்கப்பட்டதால், அயற்பகுதியிலுள்ள பல கிராமங்கள் வெள்ள அபாயத்திலிருந்து தப்பியுள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் முன்னெச்சரிக்கையாக தொண்டைமானாறு பாலத்தின் வான்கதவுகள் ஏற்கனவே திறந்துவிடப்பட்டன.

இதனால் அண்மைய பெரும் மழையின் போது அச்சுவேலி வல்லை முதல் புத்தூர் வண்ணாத்திப்பாலம் வரை தேங்கிய வெள்ளம் குடிமனைகளுக்குள் செல்லாமல் கடலுக்குச் சென்றுள்ளது. அத்துடன் அச்சவேலி வடக்கு, தெற்கு, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி வரையான கிராமங்களும் வெள்ள இடரிலிருந்து தப்பியுள்ளன. (க-17)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0737 | A | 5 3 8 8 4 2 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | 0738 | Z | 6 8 7 0 4 6 |

### Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 3003 | X | 03 09 24 35 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | 3004 | H | 08 27 48 52 |

### சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | E | 17 19 31 52 | 5164 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | X | 27 34 44 56 | 5165 |

### SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0833 | 05 14 37 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | 0834 | 02 20 44 |

### லக்ன ராசி

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | விருச்சிகம் | 12 21 29 56 | 4715 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | மேஷம் | 13 25 33 56 | 4716 |

### KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | X | 10 | 09 18 28 62 | 2179 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | W | 23 | 39 56 63 64 | 2180 |

### அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 30.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | S | 52 53 57 72 | 2829 |
| 01.12.2025 | திங்கட்கிழமை | R | 11 21 32 34 | 2830 |




# இலங்கையின் மீட்சிக்கு உடன் நிற்கும் ஐ.எம்.எப்.

நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.3**

**மிக மோசமான வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பில் கவலை வெளியிட்டிருக்கும் சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா இலங்கையின் மீட்சிக்கும், மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்க சர்வதேச நாணயநிதியம் தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.**

அவரது உத்தியோகபூர்வ சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மிக மோசமான வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் மக்கள் தொடர்பில் மிகுந்த கரிசனை அடைகிறோம். இந்த அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அதேவேளை, இந்த நாடுகளின் மீட்சிக்கும், மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியம் தயாராக இருக்கின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## முன்னாயத்தங்கள் இல்லாதிருந்து மக்களைக் கொலை செய்தது அரசு!

சாடுகின்றார் சாணக்கியன் எம்.பி.



கொழும்பு, டிசெ.3

இந்தப் பேரிடர் உயிரிழப்புகள் ஒரு கொலை. உரிய தயார் நிலைமையில் இல்லாதிருந்ததன் ஊடாக மக்களைப் படுகொலை செய்திருக்கிறீர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அரசாங்கத்தைச் சாடியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதிலும் இந்த இயற்கை அனர்த்தத்தால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாங்கள் அனைவரும் ஓர் அணியாக நின்று இன்றைய நாளில் எம் மக்களது குறைபாடுகள், நிவாரணப் பணிகளை எவ்வாறு மேற்கொள்ளலாம், எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும்.

வடக்கு- கிழக்கிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணங்களை வழங்குவது என்பது தொடர்பாகப் பேசுவதற்கு நாடாளுமன்ற அமர்வை ஒரு சில மணித்தியாலங்கள் ஒதுக்கித் தரும்படியே கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இரண்டு நாள்களுக்குப் பின்பு வரவு - செலவுத் திட்டத்தை விவாதமே இல்லாமல் அப்படியே நடைமுறைக்குக் கொண்டுவர ஆதரவு தெரிவிப்போம் என நாங்கள் இணங்கியிருந்தோம். அதைக் கூறியும் நீங்கள் அமர்வை நீடிக்க இணங்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## கடும் காற்றால் மீன்பிடி உபகரணங்கள் சேதம்

கெற்பேலி மீனவர்கள் கவலை



யாழ்ப்பாணம், டிசெ.3

கனமழை மற்றும் பலத்த காற்றுக் காரணமாக மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் உள்ளிட்ட கடற்றொழிலுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன என்று தென்மராட்சி கிழக்கு கெற்பேலிப் பிரதேச மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். இதனால் தொழிலில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் வாழ்வாதாரமும் நிலைகுலைந்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ந-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டித்வா புயலின் தாக்கம்

# கிளிநொச்சி மாவட்டத்தில் 7,782 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.3

**கிளிநொச்சி மாவட்டத்தில் டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகளால், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வரையில் 7 ஆயிரத்து 782 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 590 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

டித்வா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இடருக்குப் பின்னரான காலப்பகுதியில் அந்தந்த திணைக்களங்களால் முன்னெடுக்கப்படவேண்டியவேலைத்திட்டங்கள்தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன. தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கான அடிப்படை வசதிகளை உறுதி செய்தல் தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

இடரின்போது முப்படையினர் மற்றும் துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் சேவைகள் மிக அளப்பரியது. சீரற்ற வானிலை தொடர்பான அவசர நிலைகளை எதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று மாவட்டச் செயலர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார்.

கலந்துரையாடலில் மாவட்டச் செயலக அதிகாரிகள், துறைசார்ந்த பல்வேறு திணைக்களங்களின் தலைவர்கள், முப்படையினர்,பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (க-113)



## கோழிகள் இறப்பு; எகிறும் முட்டை விலை

கொழும்பு, டிசெ.3

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சுமார் 15 இலட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக முட்டை உற்பத்தி நூறில் நாற்பது வீதம் குறைவடைந்துள்ளதாகவும் முட்டையின் விலை உயர்ந்துள்ளதாகவும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)



இரணைமடுக் குளத்தின் வெள்ளநீர் குறுக்கறுத்து பாய்ந்ததில் கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வீதி சேதமடைந்த நிலையில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இந்தநிலையில் தற்காலிக போக்குவரத்தை மேற்கொள்ளும் நடவடிக்கையில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. (ச-113)

## கிளிநொச்சி மாவட்டத்துக்கு நீர் விநியோகம் மட்டுப்பாடு

*சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்து*

கிளிநொச்சி,டிசெ.3

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட நீர் விநியோகமே மேற்கொள்ளப்படுகின்றது. எனவே மக்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதுடன், கொதிக்க வைத்து நீரைப் பருகுவதும் சிறந்தது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் அறிவித்துள்ளனர்.

தற்போது ஏற்பட்ட சீரற்ற காலநிலையால், கிளிநொச்சிக் குளத்தின் நீர் மாற்றமடைந்துள்ளது. இதனைச் சுத்திகரித்து விநியோகிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இடையில் ஏற்படுகின்ற மின்சாரத் தடையும் நீர் விநியோகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இயன்றளவு நீரைச் சுத்திகரித்து வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகிக்கப்படும். எனவே பொதுமக்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதுடன், கொதிக்க வைத்து நீரைப் பருகுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-113)

### இயற்கைப் பேரிடர்

## இரு இறப்புகள் மன்னாரில் பதிவு

மன்னார், டிசெ.3

நாட்டில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளப்பெருக்கு காரணமாக மன்னார் மாவட்டத்தில் இதுவரை இரண்டு இறப்புகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

மடுக்கரைக் கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது கடற்படையினரின் உதவியுடன் பாதுகாப்பு மத்திய நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட ஒருவர் அறிவுறுத்தல்களை பொருட்படுத்தாமல் மீண்டும் அங்கு சென்ற வேளை வெள்ள நீரில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

அத்துடன் குஞ்சுக்குளம் கிராமத்தில் வயோதிபர் ஒருவர் வெள்ள இடரில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-56)




### தவிச்ச முயல் அடிக்காதையுங்கோ!

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத்தான் வேணும். அதுக்காக புயல் காத்து அடிக்கேக்கையே காஸ்சிலிண்டரையெல்லாம் தூக்கி உள்ளுக்க வைச்சிட்டு, "காஸூக்குத் தட்டுப்பாடு" எண்டு கதை விடக்கூடாது. அப்பிடி ஒளிச்சு வைச்சு விளையாடுறதால சனமெல்லோ நெடுகலும் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்குதுகள். கொரோனா வரேக்கையும் சரி, பொருளாதாரத் தட்டுப்பாடு வரேக்கையும் சரி கடையளில சாமான் இருந்தாலும் இல்லையெண்டுதான் சொன்னவை. ஏனெண்டால் பதுக்கி வைச்சு பின்கதவால கூட விலைக்கு வித்து லாபத்தைக் கூட்டுறதுக்காகத்தான் உந்த விளையாட்டு. அதிலையும் முந்தி ஏதும் பிரச்சினையள்,நெருக்கடி வரப்போகுதெண்டால் எல்லாரும் பெற்றோல் செற்றுக்குப் படையெடுப்பினம். பெற்றோலை வழிச்சுத் துடைச்சுப்போட்டு சனத்தின்ர அடுத்த குறி காஸ் சிலிண்டர்தான்.

பெற்றோலை சனங்கள் தங்கட தேவையை விடவும் கூடவா, கானிலையும் ட்றம்மிலையும் அடிச்சு வைக்கிறதாலதான் செயற்கைத் தட்டுப்பாடு வருகுதெண்டதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் காஸூக்கு அப்பிடியில்லையே. ஒரு சிலிண்டரைக் குடுத்தாத்தான் இன்னொரு சிலிண்டர் காஸை வாங்கலாம். சிலிண்டரில காஸ் முடியமுதல் அதைக் குடுத்து புது சிலிண்டரும் வாங்கமாட்டினம். பெற்றோல் மாதிரி காஸை கானிலையோ, ட்றம்மிலையோ அடைச்சும் வைக்கமுடியாது. அப்ப எல்லாச் சனமும் இப்ப காஸ் இல்லையெண்டு ஓடித் திரியுதுகள் என்டால், இருந்த காஸ் எல்லாம் எங்க மாயமானது? அதுவும் மழையும், காத்தும் அடிச்ச நாலைஞ்சு நாள் சனங்கள் கூடுதலா வீட்டை விட்டு வெளிக்கிடேலை. கடையளும் கனக்க திறக்கேலை. தோலிருக்கச் சுளை விழுங்கின மாதிரி பூட்டுப்பட்ட கடையளுக்க இருந்த காஸ் சிலிண்டர்களெல்லாம் காணாமல் போன மர்மம் தான் இன்னும் பிடிபடேலை. எல்லாரும் சிலிண்டர்களோட கடை கடையா ஏறி இறங்கினாலும், எல்லாரும் இல்லையெண்டு கைதான் விரிக்கினம்.

இத்தனைக்கும் "காஸூக்கு ஒரு தட்டுப்பாடும் இல்லை. பாதையள் தடைப்பட்ட இடங்களுக்கும் இப்ப அனுப்பத் தொடங்கிட்டம்" எண்டு காஸ் கொம்பனிக்காரரே அறிவிச்சிட்டினம். அப்பிடியிருந்தும் எங்கட கடைக்காரர் சிலிண்டர்களை வெளியில எடுக்கினமில்லை. இப்ப வெள்ளத்தால இடம்பெயர்ந்து இருக்கிற சனத்துக்கு சாப்பாடு செய்து குடுக்க, சிலிண்டர்கள் தேவை. அதோட மழை வெள்ளத்துக்கு விறகுகளெல்லாம் நனைஞ்சு போனதால, எல்லாருக்கும் கொஞ்சநாளைக்கு சமையலுக்கு சிலிண்டர் கட்டாயம் எண்ட நிலைமை., அந்த வீரியம் விளங்காமல், தவிச்சமுயல் அடிக்கிற வேலையை உந்தக் கடைக்காரர் செய்யிறது மனச்சாட்சிக்குப் பிழையான அலுவல் கண்டியளோ.

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** இன்றுபுதியமுயற்சிகளில்ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும்வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது வார்த்தைகளில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் சில பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். அவசியத் தேவை இருந்தால் மட்டுமே தக்க முன்னேற்பாடுகளுடன் வெளியில் செல்லவும்.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



## பேசாலை வெற்றி அன்னை பெருவிழா ஆரம்பம்

மன்னார், டிசெ.3

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய நிலையில் வழிபாடுகள் இடம் பெறுகின்றன. எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாவது திருப்ப லியும், காலை 7 மணிக்கு பெருவிழாத்திருப்பலியும் மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசன் அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக இடம்பெறவுள்ளன. (ச-41-60)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.3

சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் 'திருமுகங் கொடுத்த படலம்' எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.3

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சின்கீழ் செயற்படும் பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்துக்கு 2026ஆம் ஆண்டுக்குரிய வளவாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக இசை, சிங்களம், வயலின், சித்திரம், பரதநாட்டியம், மிருதங்கம், வீணை ஆகியவற்றைப் பயிற்றுவிக்கக்கூடிய தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் வடமராட்சி வடக்குப் பிரதேசத்துக்குள் வசிப்பவராக இருக்கவேண்டும். பெயர், முகவரி, பிறந்த திகதி, கிராம அலுவலர் பிரிவு, தொலைபேசி இலக்கம் மற்றும் துறைசார்ந்த தகைமை உள்ளிட்ட அத்தாட்சிப்படுத்தும் விபரங்களுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியும். (க-இ)

## வீதியில் தேங்கிய வெள்ளம் அகற்றல்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ்.கச்சேரி நல்லூர் வீதியில் தேங்கியிருந்த வெள்ளம் யாழ்.மாநகரசபையினரால் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டது. தொடர்ந்து பெய்த மழையால் அந்தப் பகுதியிலுள்ள குளம் நிரம்பி வெள்ளநீர் குடியிருப்புகளுக்குள் புகுந்தது. அத்துடன் கச்சேரி நல்லூர் வீதி வெள்ளத்தால் மூடப்பட்டு போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-17)



யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கலாமன்றத்தினால் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-26)

## குமராலய தீபம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

திருக்கார்த்திகை விரதத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை ஆலயங்களில் குமராலய தீபம், சொக்கப்பனை எரித்தல் என்பன இடம்பெறவுள்ளன. சிறப்புப்பூசை, அபிசேகம் என்பன இடம்பெற்று மாவிளக்குப் போடுதல், தீபம் ஏற்றுதல் நடைபெறும். தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை திருக்கார்த்திகை சர்வாலய தீபம் மற்றும் விஷ்ணுவாலய தீபம் என்பன இடம்பெறும். (க-17)

## கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.3

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 61ஆவது நினைவுதின நிகழ்வு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபைத் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான அகல்யா செகராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரனும், கௌரவ விருந்தினர்களாக யா.மா.கால்நடை வ.கூ.ச.சமாசத் தலைவர் அன்ரன் கரிஸ்ரர் ஸ்ரீபன், யா.மா.விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவர் ச.முருகநேசன், யா.மா.ப.தெ.அ.கூ. ச. சமாசத் தலைவர் சி.சுதர்சன், யா.மா.கூ.கி.வ.சமாச உபதலைவர் செ.காந்தராசா, யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசத் தலைவர் ச.பரமானந்தன், யா.மா.கடற்றொழிலாளர் கூ.ச.சமாசத் தலைவர் அ.மரியதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் தெ.ஹர்சன் நினைவுப்பேருரையை வழங்குவார். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# இடரைக் கடப்போம்!

'டித்வா' பேரிடர் இலங்கையைப் புரட்டிப்போட்டிருக்கின்றது. முழு நாடுமே பாதிப்புகளை எதிர்கொண்டிருக்கும் நிலையில் அதிலிருந்து மீண்டு மேலெழுவதற்கான பொறுப்பும் கடமையும் அரசாங்கத்தில் இருந்து சாதாரண குடிமக்கள் வரையிலும் இருக்கின்றது. இவ்வாறான பேரிடர் நிலைமையில் அனைவரும் ஒன்றாகக் கைகோர்ப்பதும், நிலைமைகளை மேலும் இக்கட்டுக்குள்ளாக்காத வகையில் செயற்படுவதும் இன்றியமையாதது. நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அதை உணர்ந்து செயற்படுதல் அவசியம். இயற்கைப் பேரிடர்கள் ஒரு நாட்டின் நிலைமைகளையும், வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் ஒரே நேரத்தில் உலுக்கிச் செல்லக்கூடிய சக்திவாய்ந்த சவால்களாகும். இலங்கையைப் புரட்டிப் போட்டுள்ள வெள்ளப்பேரிடரும் அதற்கு விதிவிலக்கில்லை. வடக்கிலிருந்து தெற்குவரை, நகரங்களிலிருந்து கிராமங்கள்வரை, ஒவ்வொரு வீட்டின் வாசலையும் இந்தப் பேரிடர் தொட்டுச் சென்றிருக்கிறது. வீடுகள் சேதமடைந்து, வாழ்வாதாரங்கள் தடைப்பட்டு, போக்குவரத்துப் பாதைகள் முடங்கியிருக்கும் நிலையில் -நாடு இயல்புநிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில்- பொதுமக்கள் முதல் அரசாங்கம் வரை அனைவரின் பொறுப்புணர்ச்சியும் ஒற்றுமையும் வெளிப்பட வேண்டிய தருணம் இது.

இவ்வாறானகாலகட்டங்களில் பொருள்களுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படுவது இயல்பான ஒன்று. போக்குவரத்துத் தடைகள் காரணமாக சில பொருள்கள் தாமதமாக வரக்கூடும்; சிலவற்றின் விலை தற்காலிகமாக உயரக்கூடும். ஒரு பேரிடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இது வழமையான ஒன்று. ஆனால் இந்த யதார்த்ததை உணராது செயற்படும் பொதுமக்களின் அதிகப்படியான பொருள் சேமிப்பு மற்றும் சில வர்த்தகர்களின் பொருள் பதுக்கல், பேரிடர் நெருக்கடிக்கு மேலான நெருக்கடிகளை உருவாக்கிவிடக்கூடும். உதாரணமாக பல இடங்களில் மக்கள் எரிபொருள்களைச் சேமித்து வைக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். திடீர் விலையேற்றங்கள் - பொருள் தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. மக்களின் தேவைக்கதிமான கொள்வனவுச் செயற்பாடுகளும் இதற்குக் காரணமாக இருக்கின்றன. இவ்வாறா நிலைமைகள் பேரிடர் நெருக்கடிக்கு மேலதிகமான நெருக்கடிகளை நாட்டில் உருவாக்கும் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். இவ்வாறான மேலதிகச் சுமைகளால் அரசாங்கத்தின் நேரம், ஆற்றல், வளம் தேவையற்ற இடங்களில் வீணாக வேண்டியிருக்கும்.


இவ்வாறான நெருக்கடியை எவ்வாறு கடக்கமுடியும்? அதன் விடை மிக எளிமையானது: எல்லோரின் பொறுப்புணர்ச்சியும் ஒற்றுமையுமே. இயற்கைப் பேரிடர் எமது கட்டுப்பாட்டை மீறியிருந்தாலும், அதன் விளைவுகளை எவ்வாறு குறைப்பது என்பதை மக்கள் ஒவ்வொருவரும் தீர்மானிக்கமுடியும். தேவையான அளவிலேயே பொருள்களை வாங்குவது, அச்சத்தை பரப்பாது செயற்படுவது, தவறான தகவல்களைப் பகிராமல் எச்சரிக்கையுடன் இருப்பது, அவசரநேர உதவி நடவடிக்கைகளில் இணைவது இவை அனைத்தும் ஒவ்வொருவரும் செய்யக்கூடிய செயல்கள். பேரிடரில் சிக்கிய ஒரு நாட்டின் மீளெழுச்சி அரசாங்கத்தால் மட்டும் சாத்தியமில்லை; மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்படுதல் மிகவும் முக்கியமான கடமையாகும். நாட்டின் மீளெழுச்சி ஒவ்வொருவரின் நடத்தை, முடிவுகள் மற்றும் ஒற்றுமையின் விளைவிலேயே தங்கியிருக்கின்றது. இந்த பேரிடரைக் கடந்து முன்னேறுவதற்கான பொறுப்பு ஒவ்வொருவரிடமும் உள்ளது என்பதை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

தேவைக்கு மேலே பொருளும் திறமைக்கு மேலே புகழும் கிடைத்துவிட்டால் பார்வையில் படுவதெல்லாம் சாதாரணமாகத்தான் தோன்றும்.

—கண்ணதாசன்—



## வெளிநாட்டு நன்கொடைகள் சுங்க வரியின்றி இறக்குமதி!

**கொழும்பு, டிசெ. 3**

**வெளிநாட்டு நன்கொடையாளர்களால் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை சுங்கவரிகள் மற்றும் கட்டணங்கள் இன்றி இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் பொறிமுறையொன்றை வகுத்துள்ளது.**

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப்பொருள்களை நன்கொடையாக வழங்குவதற்காக வெளிநாட்டு அமைப்புகள், தனிநபர்கள் மற்றும் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் விடுத்த வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்டே இந்த நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி, அவர்கள் நாட்டுக்கு அனுப்பும் பொருள்களின் உதவிகளை அனைத்து சுங்க வரிகள் மற்றும் கட்டணங்களில் இருந்து விடுவித்து விரைவாக விநியோகிப்பதற்காக இலகுவான நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நன்கொடைகள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்காக WWW.CUSTOMS.GOV.LK என்ற இணையத்தளத்தைப் பார்வையிடலாம். நன்கொடையாக வழங்கக்கூடிய அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பொருள்களின் வகைகள் பற்றிய விரிவான தகவல்களை WWW.DONATE.GOV.LK என்ற இணையத்தளத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## ரயில் பருவச்சீட்டு செல்லுபடி நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 3

நவம்பர் மாதத்துக்கான ரயில்பருவச்சீட்டின்செல்லுபடியாகும் காலம் 2025.12.7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் நிலவும் அனர்த்த நிலைமை காரணமாக ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், ரயில் பயணங்களின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## காலாவதி 'லைசென்ஸ்' சாரதிகளுக்குச் சலுகை

கொழும்பு, டிசெ. 3

சீரற்ற காலநிலை காரணமாக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கமுடியாமல் போன சாரதிகளுக்கு சட்டரீதியான தடை இன்றி வாகனங்களைச் செலுத்துவதற்கான சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2025.11.25 ஆம் திகதி முதல் 2025.12.25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கு விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில், காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்துக்கொண்டு வாகனம் செலுத்துவது போக்குவரத்து விதிகளை மீறுவதாகக் கருதப்படாது என மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச-அ)

## இலங்கைக்கு அவுஸ்திரேலியா ஒரு மில். டொலர்

கொழும்பு, டிசெ. 3



'டித்வா' புயல் காரணமாக பாதிப்பை எதிர்நோக்கியுள்ள இலங்கைக்கு உடனடி அவசர நிவாரணமாக அவுஸ்திரேலிய அரசாங்கம் ஒரு மில்லியன் அவுஸ்திரேலிய டொலரை வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணமாக பயன்படுத்தப்படும் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (ச-இ)

## பணவீக்கம் ஏற்றம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ச்சியாக எட்டு மாதங்களாக அதிகரித்தநிலையில், கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் நவம்பரில் 2.1 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்படுகின்றது என்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பணவீக்கம் கடந்த நவம்பரில் 3.0 சதவீதத்துக்கும் குறைவடைந்துள்ளது. அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் ஆண்டு அடிப்படையில் கடந்த ஒக்ரோபரில் 1.4 சதவீதமாக பதிவாகியிருந்த நிலையில் நவம்பர் மாதத்தில் 1.7 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை - கார்த்திகை 18
04.12.2025
சுபநேரம் : 07.45 - 09.15
ராகுகாலம் : 01.45 - 03.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரால் அந்தரிக்கும் நானாட்டான் மக்கள்; அவசர உதவிகள் இல்லாது திண்டாட்டம்

மன்னார் மாவட்டத்தில் தொடர்ந்தும் மழை பெய்து வருவதால், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அவசர உதவிகள் இல்லாது திண்டாடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளப்பகுதியில் இருந்து வெளிவரமுடியாத மக்களுக்கு கடற்படையினரின் உதவியுடன் சமைத்த உணவுகள் மற்றும் அவசர உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. மன்னார் மாவட்டச் செயலரின் ஆலோசனைக்கு அமைவாக, மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மாவட்டத்தில் தொடர்ச்சியாக துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர். எனினும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுகள் உரிய முறையில் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். நானாட்டான் பிரதேச செயலர் மற்றும் அப்பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் இக்கட்டான நிலையில் உள்ள மக்களுக்கு அவசர உதவிகளை வழங்க துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு-56)

# விநாயகர் விரதம்

யாழ்ப்பாணம்,டிசெ.3

யாழ். வண்ணார்பண்ணை வடக்கு-கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதம் நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை தொடக்கம் தினமும் மாலை 3.30 மணிக்கு அபிசேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டபப் பூசையுடன் விநாயகர் பெருமான் வீதிவலம் வருதலைத் தொடர்ந்து பிள்ளையார்கதை படிப்பு நடைபெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கணபதி ஹோமமும், 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு சதுர்த்தி உற்சவமும், 25 ஆம் திகதி வியாழக்கிழமை விநாயகர் சஷ்டியை முன்னிட்டு மாலை 3 மணிக்கு அபிசேகம் ஆரம்பமாகி, மூலமூர்த்திப் பூசை, வசந்த மண்டபப்பூசையுடன் விநாயகப்பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வருதலைத் தொடர்ந்து பெருங்கதை படிப்புப் பூர்த்தியாகும். (சு-இ)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 . 05 . 1942 | 01 . 12 . 2025 |

### திருமதி சாந்தகுமாரி கந்தசாமி

இலங்கை, யாழ்ப்பாணம் வலிமேற்கு சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், மெல்பேர்ண் அவுஸ்ரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமாரி கந்தசாமி அவர்கள் கடந்த 01.12.2025 திங்கட்கிழமை அவுஸ்ரேலியா மெல்பேர்ணில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (விதானையார்) - திலகவதியார் தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன் - தெய்வநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சதானந்தவேல், நிர்மலாதேவி, மற்றும் நித்தியானந்தமனுநீதி (இலங்கை), கிருபானந்தமனுநீதி (இலங்கை), நளாயினி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சச்சிதானந்தராணி மற்றும் கலாவதி (இலங்கை), சந்திரவதனி (இலங்கை), தயாபாரநாதன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனியும், ஈஸ்வரநாதன் (மெல்பேர்ண்), அருனகிரிநாதன் (கிரி - மெல்பேர்ண்), செந்தில்நாதன் (செந்தில் - சங்கநாதம் வானொலி அறிவிப்பாளர், மெல்பேர்ண்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நிரஞ்சனி, சுபாயினி, மனுஆனந்தன், திலகா, மனுகரன், மனுமதி, மதுமிதா, மனுமயூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அகிலன், அரவிந்தன், ரமேஷ், தர்ஷனா ஆகியோரினின் பெரியம்மாவும் சாம்பிகா, அபிரம்யா, கவிப்பிரியா, வைஷாலினி, நிவேதா, தினேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 1.00 மணிவரை அவுஸ்ரேலியா நாட்டின் மெல்பேர்ண் நகரில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

ஈஸ்வரன் - மகன் (மெல்பேர்ண்) +614 0653 5155
கிரி - மகன் (மெல்பேர்ண்) +614 0405 8268
செந்தில் - மகன் (மெல்பேர்ண்) +614 2137 2989
நித்தியானந்த மனுநீதி - தம்பி (இலங்கை) +947 7621 7550

"மனு இல்லம்"
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

CS 30841) A


# தீவக வீதிகள் துப்புரவு

மழை மற்றும் கடல் கொந்தளிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தீவகப் பகுதியின் பிரதான வீதிகள் வேலணைப் பிரதேசசபையினரால் துப்புரவு செய்யப்பட்டுவருகின்றன. புங்குடுதீவு பிரதான வீதி, பண்ணை பிரதான வீதி ஆகியவற்றில் கரையொதுங்கிய கழிவுகள் அகற்றப்பட்டு, போக்குவரத்துக்கான இடையூறுகள் நீக்கப்பட்டன. (சு-17-66)

## மரண அறிவித்தல்

### சொலமன் றெஜிராஜசீலன் கருணை சூரியதாஸ்

(றெஜி சொலமன் - லாவண்யா பல்மூக்குக் கண்ணாடி உரிமையாளர்)



பிறப்பு:09.05.1944 இறப்பு:02.12.2025

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொலமன் றெஜிராஜசீலன் கருணை சூரியதாஸ் அவர்கள் நேற்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
076 66 092 58

இல.09, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 . 01 . 1963 | 30 . 11 . 2025 |

### குகமலர் இராதாகிருஸ்ணமூர்த்தி (மலர்)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்)

யாழ். இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் மேற்கு, சிவன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குகமலர் இராதாகிருஸ்ணமூர்த்தி (ஓய்வுநிலை உத்தியோகத்தர் அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் கடந்த (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை - குழந்தையார் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தணிகாசலம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், த.இராதாகிருஸ்ணமூர்த்தி (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சௌமியா (இலண்டன்), சாருகன் (சாரு - இலண்டன்) அகியோரின் பாசமிகு தாயாரும், நிராஜ், வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நேஹாவின் (இலண்டன்) பாசமிகு பேர்த்தியும், குகநேசன் (கனடா), காலஞ்சென்ற குகநாதன் மற்றும் குகதாசன் (கனடா), குகப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணேசமூர்த்தி, சிவமூர்த்தி (கனடா), சுரேந்திரன் (கனடா), காலஞ்சென்ற சுயந்தி, மற்றும் சிவசோதி (கனடா), பகவதி (கனடா), சுபாசினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
ராதா (கணவன்) - 077 902 4302
சாரு (மகன்) - 0044 783 640 5515

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
ஆவரங்கால்.

CS/60068) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலையில் விற்போரை காட்டிக்கொடுக்க இலக்கங்கள்

கொழும்பு, டிசெ.3

தற்போதைய நெருக்கடியான சூழலில் அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பான தகவல்களை வழங்கவேண்டும் என்று நுகர்வோர் அதிகாரசபை பொது மக்களிடம் கோரியுள்ளது. விலை தொடர்பான தகவல்களைத் தெரிவிப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனித்தனியே துரித தொலைபேசி இலக்கங்களை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை வெளியிட்டுள்ளது. வடக்கு மாகாண மக்கள் 077 108 8910 என்ற தொலை பேசி இலக்கத்தின் ஊடாக அறிவிக்கமுடியும் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)


சர்வதேச புலவர் திருமண சேவை

75ஆவது ஆண்டில் கால்வைத்திருக்கிறோம்!

1950இல் செல்வராஜா துரைசிங்கம் அவர்கள் தொடங்கிய கணக்கர் திருமண சேவை",
பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக
1962இல் புலவர் செ.து. தெட்சணாமூர்த்தி அவர்கள் வழிநடத்திய
"சர்வதேச புலவர் திருமண சேவை"
இப்போது மீண்டும் டிசம்பர் 5ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுகிறது!
எங்கள் சேவையை நாடுங்கள்
உங்கள் மகிழ்ச்சி எங்கள் மகிழ்ச்சி!



238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 222 7147 , 077 075 7610
(CS/60053) 4-1


# மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று

கருவி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு, சாவகச்சேரி நகரசபையின் பொன்விழாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கருவி நிறுவனத் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரிப் பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி, சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் வி.ஸ்ரீபிரகாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (க-66)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## படவரைஞர்களை பதிவு செய்தல் - 2026


வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துகொள்ள விரும்புபவர்கள் ) கீழ்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் 03.12.2025 ஆம் திகதி முதல் 30.01.2026 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- NVQ - 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் எமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞர் பதிவினை மேற்கொண்டவர்களில் தற்போது NVQ - 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை தொடர்பவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞருக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
- 30.01.2026 இற்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்க தவறும் படவரைஞர்கள் தாமத கட்டணமாக ரூபா 1000.00 இனை செலுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்ய தவறிய அல்லது புதுப்பிக்க தவறிய எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.

குறிப்பு:
- படவரைஞராக பதிவுசெய்தல்/ புதுப்பித்தல் விண்ணப்ப படிவக் கட்டணம் ரூபா 1000.00
- புதிதாக படவரைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 3000.00
- 2025 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 2026 ஆண்டிற்காக பதிவினை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரூபா 2000.00.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர். 03.12.2025


## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 01 . 1946

இறப்பு 30 . 11 . 2025

### நடராசா முத்தம்மா

புங்குடுதீவு 06ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முத்தம்மா அவர்கள் கடந்த 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை (ஜேர்மனி), கனகலிங்கம் (கனடா) மற்றும் யோகேஸ்வரி (ஜேர்மனி), இரத்தினசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற சபாரெத்தினசிங்கம் (புங்குடுதீவு) மற்றும் துரைராஜா (சுவிஸ்), விசுவலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், சரஸ்வதி (ஜேர்மனி), காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிவலிங்கம் (ஜேர்மனி), நாகேஸ்வரி (கொழும்பு), இராஜேஸ்வரி (புங்குடுதீவு), ஈஸ்வரி (சுவிஸ்), கமலேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

06ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல் : குடும்பத்தினர்
077 168 5379

(CS/60058) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 10 . 1935



மறைவு 02 . 12 . 2025

### காங்கேசு நாகம்மா

இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு நாகம்மா நேற்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காங்கேசுவின் அன்பு மனைவியும், சிவகாந்தன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), சிவபவானி (ஆசிரியை, யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சிவரஜனி (சுவிஸ்), சிவரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுலோசனா (பவா), இந்திரகுமார் (குமார்-விநாயகர் ஸ்ரோர்ஸ்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), ஜெயதீபன் (வேலணை) ஆகியோரின் அன்பு மாமியாரும், திலக்ஷிகன் (Hemas Pharmacetical Ram Medical), பானுஷியன் (People's Leasing & Finance PLC), பௌசிகன் (Software Engineer), சுருதிகன் (Northern Uni), கௌதமன் (சுவிஸ்), ஷரண்யா, ரிஷிகேஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்பலம், சின்னராசா, பவளம் மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

33/8, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல் : குடும்பத்தினர்
மகன் - 077 978 9221
மகள் - 077 900 4476
மருமகன் - 077 868 9922

(CS 60037) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.04.1977 | 01.12.2025 |



### பவளமலர் தீபன்
(ஆசிரியை, யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை)

திக்கம்புரை வயாவிளானைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தீபன் பவளமலர் அவர்கள் கடந்த 01.12.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தீபன் (ஆசிரியர், யாழ். வேம்படி மகளீர் உயர்தரப் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - இலட்சுமி தம்பதியரின் இளைய புத்திரியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் புஸ்பராணி தம்பதியரின் மருமகளும், லிதனின் (மாணவன்- யா/ கரந்தை இராமப்பிள்ளை வித்தியாலயம்) அன்புத் தாயாரும், கனகராணி, நாகேஸ்வரி, தர்மலிங்கம், யுதானந்தசிவம், குகராசன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்க ளான துரைராசா, சுந்தரலிங்கம் மற்றும் லிங்கேஸ்வரி, சந்திரராஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), உதயராசா, ரூபன், ரூபி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாசர் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும், லேராஜி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், காரைநகர்), ரமேஸ் (ஆசிரியர்-யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.12.2025) வெள்ளிக்கிழமை பி.ப1.00 மணியளவில் கோப்பாய் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 9044 968
077 0759 690

தகவல் :
குடும்பத்தினர்

(CS 60069) A

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01.01.1947 | 30.11.2025 |



### சின்னத்துரை செல்வராசா

தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆனந்தா வீதியை வதிவிட மாகவும் கொண்ட சின்னத்துரை செல்வராசா கடந்த 30.11.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா - அன்னம் தம்பதியரின் மருமகனும், யோகராணி அவர்களின் அன்புக் கணவரும், டெய்சிராணி (லண்டன்), ஞானராஜா, தயாளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரவிந்தன் (லண்டன்), வினோதினி, இந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினேஷ், பிரசாத், அஸ்வின், திவ்யா, சாய்நேகா, றொசின், கபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஸ்ரீபன் துரைச்சாமி, காலஞ்சென்ற கந்தசாமி திரவியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யோகராசாவின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 30841) A

## மரண அறிவித்தல்

### சிவபாக்கியம் கனகரட்ணம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மாப்பாணவூரி, காரைநகரை வதிவிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் கனகரட்ணம் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.12.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், RDA) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நேசம்மா, லீலாவதி, Dr.குணரட்ணம், கமலாவதி, சிவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், லீலாவதி, சொர்ணம்மா, ராமகிருஷ்ணன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மனோகரன், கல்யாணி, குணசேகரன் (கனடா), ஞானசேகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேணுகா, உருத்திரேஸ்வரன், பூர்வகல்யாணி (கனடா), சாவித்திரிதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துளசிகா, சாம்பவி, சனாதனன், திவாகர் (லண்டன்), அபிநயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.



40, நெல்லியடி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
குணசேகரன் (மகன்) - 074 216 1483
ஞானசேகரன் (மகன்) - 077 423 8520
பூர்வகல்யாணி (மருமகள்) - 076 225 5429

(CS/60056) J-1

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10.03.1936 | 01.12.2025 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 06 . 1937



மறைவு 29 . 11 . 2025

## திருமலர் பேரின்பநாயகம்

அச்செழுவை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமலர் பேரின்பநாயகம் அவர்கள் கடந்த (29.11.2025) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் வறுத்தலை விளானைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பேரின்பநாயகத்தின் அன்பு மனைவியும், சின்னையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், தம்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், திருநாயகம் (U.S.A), நவமலர் (Canada), லோஜினி (Canada), ஜீவநாயகம் (Canada) ஆகியோரின் அன்புத் தாயும், கலாவதி (U.S.A), சரத்சந்திரன் (Canada), முரளிதரன் (Canada), வாசுகி (Canada) ஆகியோரின் அன்பு மாமியும், செஷாணி, ஷப்றினா, அர்ஜீனா, திவாகரன், லாவண்யா, ஜெனோஜினி - ஐஸ்ரின், மிதிலன், மேனகன், கோபிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சின்னத்தம்பி, கனகசபை ஆகியோரின் அன்பு அக்காவும், தர்மகுணலோசனா, அம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், சசீந்திரன், நேசன், தாரணி ஆகியோரின் அன்பு மாமியும், ஜொலினியின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (04.12.2025) வியாழக்கிழமை கனடா நேரம் காலை 08.00 - 11.00 மணியளவில் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்:**
கனகசபை (தம்பி) - 077 030 6369
தாரணி (மருமகள்) - 077 993 5497
சின்னத்தம்பி (தம்பி) - 077 640 8614

61, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(CS/60055) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1942



மறைவு 29 . 11 . 2025

## குமாரசுவாமி கதிர்காமத்தம்பி

நவாலி வடக்கை பிறப்பிடமாகவும், கட்டப்பிராயை வசிப்பிடமாகவும், கொண்ட குமாரசுவாமி கதிர்காமத்தம்பி அவர்கள் கடந்த 29.11.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சுதுமலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வர்களான இராசரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், புஸ்பவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஜோதிடர், கட்டப்பிராய்), நாகேஸ்வரி, செல்வராஜா, வேலாயுதம் மற்றும் விமலராணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி கந்தசாமி, நடேசலிங்கம், லலிதாதேவி மற்றும் வலிதாம்பிகை, இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2025) வியாழக்கிழமை கட்டப்பிராய் வட்டக்குளம் அருகில் அமைந்துள்ள "ரவிமதி" இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
சத்தியவரதன் - மஞ்சுளா (பெறாமகன்) - 076 5370 563
சுப்பிரமணியம் - வரதபாஸ்கரன் (பெறாமகன்) - 077 170 4292
சுப்பிரமணியம் - ராஜபாஸ்கரன் (பெறாமகன்)
கணேசலிங்கம் - துவாரகா (மருமகள்) - 077 292 8741

(CS/60049) A

# நூல் அறிமுகம்

சாந்தினி வரதராஜன் எழுதிய 'எல்லாம் இழந்த பின்னும்' எனும் நூல் அறிமுக நிகழ்வு 182 அம்மன் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணத்தி லுள்ள 'எங்கட புத்தகம்' இல்லத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம்பெறவுள்ளது. அ.யேசுராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் த.அஜந்தகுமார், மாதவி உமாசுதசர்மா, ந.குகபரன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை வழங்குவர். (ச-41)


## கட்டிட வேலை

எந்த வேலை என்றாலும் செய்து தரப்படும்.
மாபிள் வேலை
1 ஸ்கொயர் நிலம் - 100 ரூபா
நிலக் கல்லு பதித்து தரப்படும்.
076 470 4894
(CS/60059) J-1


## நல்லூர் பிரதேச சபை பொது அறிவித்தல்
## 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களை பதிவு செய்தல் / புதுப்பித்தல்

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட நிர்மாண அனுமதியினை பெற்றுக் கொள்ளும் முகமாக கட்டட வரைபடத்தினை வரையும் படவரைஞர்களை பதிவு செய்ய/ புதுப்பிக்க சபையினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. NVQ நிலை 5ல் தொழில்நுட்பம் (கட்டடம்) Drafting Technology (Buildings) NVQ-Level-05 நெறியினை பூர்த்தி செய்த மற்றும் இக் கற்கைநெறியினை தொடரும் விண்ணப்பதாரர்கள் 2025.12.31 ஆம் திகதிக்கு முன்னராக சபையுடன் தொடர்பு கொண்டு உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சபை ஆளுகைப் பகுதியானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்வாங்கப்பட்டதன் அடிப்படையில் 2021.07.08ம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நகர அபிவிருத்திஅதிகார சபையின் ஒழுங்கு விதிகளின் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற நபர்களால் வரையப்படும் வரைபடங்கள் மாத்திரமே 01.01.2026ம் திகதி முதல் கட்டட அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்

ப.மயூரன்,
தவிசாளர்
நல்லூர் பிரதேசசபை

2025.12.02

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1943



மறைவு 01 . 12 . 2025

## சின்னத்தம்பி சண்முகசுந்தரம்

மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகசுந்தரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.12.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தையல்நாயகி அவர்களின் அன்புக் கணவரும், தினேஷ் (லண்டன்) அவர்களின் பாசமிகு தந்தையும், பிரவீனா அவர்களின் பாசமிகு மாமனாரும், தியா அவர்களின் பாசமிகு பேரனாரும், சாந்தலிங்கம், ஜெகநாதன், சித்திராகௌரி, வாமதேவன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கைலநாதன், சண்முகநாதன், விமலநாதன், விக்கினராஜா, கலாபதி, அருணகிரிநாதன், அருந்ததி, கால்ஞ்சென்ற கோபாலநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
குடும்பத்தினர்

கேணிக்கரை,
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி

(CS/60067) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பெறுகைகளுக்கான திகதி மாற்ற அறிவிப்பு

சேவைகள்:

1. கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2026
2. வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை - 2026

மேற்படி சேவைகளுக்கான பெறுகைகள் கடந்த. 15.11.2025 அன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தினூடாகக் கோரப்பட்டிருந்து. அதன்படி பெறுகைக்கான முடிவு திகதி 01.12.2025 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த நிலமைகளைக் கருத்திற்கொண்டு பெறுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான முடிவுத் திகதி கீழ்வருமாறு கால நீட்டிப்பு செய்யப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

- **ஏல ஆவணம் பெறும் கடைசி திகதி: 05.12.2025 வரை**
- **ஏல திறப்பு திகதி: 08.12.2025 பி.ப 02.30 மணி**

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (பொது நிர்வாகம்). யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து தொலைபேசி இலக்கம் (021-2226517) மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர். பெறுகைக்குழு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** 03.12.2025

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.
## படவரைஞர்களைப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் 2026

2026ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு / புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். படவரைஞருக்கான NVQ Level 5 in Drafting Technology (Building) சான்றிதழ் அல்லது NVQ Level 4 in Drafting Technology (Building) கற்கைநெறிக்கான சான்றிதழுடன் NVQ Level 5 in Drafting Technology (Building) கற்கைநெறியினை தற்போது பயின்று கொண்டிருப்பதற்கான உரிய உறுதிப்படுத்தல் கடிதத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். பதிவுகளை புதுப்பிக்காத படவரைஞர்களால் வரையப்படும் வரைபடங்கள் 2026.01.01 இற்கு பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இப்பதிவிற்கான விண்ணப்பப்படிவங்களை எமது சபை உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபை உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ள முடியும்.

**க.யெசீதன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.** 2025.12.03

# வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்
# வழங்குனர்களை பதிவு செய்தல் - 2026

வலிகாமம் மேற்கு பிரதேச சபையானது 2026 ஆம் ஆண்டுக்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகள் / வேலைகள் போன்றவற்றை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், வியாபார நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலைகள்
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும்
தொகுதி "D" - ஒப்பந்த வேலைகள்
தொகுதி "E" - உணவு வகைகள்.

| தொகுதி A | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள், எழுதுபொருட்கள், உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /இரும்பு/ உருக்கு) |
| A-03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் நிழற் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A-05 | குளியலறை பொருத்திகள், மாபிள்கள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் கட்டுமாணப் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின் விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A-09 | சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள் மற்றும் ஏனையவை. |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோல் உற்பத்திப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | கற்கள், மண் வகைகள், கூட்டெரு பசளை, தார் |
| A-15 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-16 | அலங்காரப் பொருட்கள் |
| A-17 | பனை மரங்கள், சலாகைகள், கம்பஸ் மரம், ஏனைய பலகைகள். |
| A-18 | இரும்புப் பொருட்கள், வேலைத்தள உபகரணங்கள். |
| A-19 | பாதணிகள், தோல்பொருட்கள், மழைக்கவசம், கையுறை. |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |
| A-21 | அலுமினிய பிற்றிங்குடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள், மரம் நாற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| A-23 | மருந்துப் பொருட்கள் |
| **தொகுதி -B** | **சேவைகள்/ வேலைகள்** |
| B-01 | மரத்தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் திருத்தம் |
| B-02 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கலும், திருத்தம் செய்தலும். |
| B-03 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல், மின்விசிறிகள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் நிழல் பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் திருத்தம் சேவிஸ் செய்தல் |
| B-04 | மின்பிறப்பாக்கி, இலத்திரனியல் சாதனங்கள், துணைப் பொருட்கள் திருத்தம் |
| B-05 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-06 | கோலவுடை தைத்தல், கோலவுடை வழங்குதல் |
| B-07 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-08 | கணினி பிறின்டர் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும் பராமரிப்பு செய்தலும் |
| B-09 | பதிப்பக வேலை - சகலவித படிவங்களும் அச்சிடலும் புத்தகங்கள் கட்டுதலும் |
| B-10 | பனர், ஸ்ரிக்கர், லமினேற்றிங், போட்டோபிறேம் மற்றும் தொடர்பான சேவைகள். |
| B-11 | கட்டிட அமைப்பும் திருத்த வேலைகளும் |
| B-12 | இரும்பு, கம்பிநெற் தொடர்பான பிற்றிங் வகைகள். |
| B-13 | ஏற்றியிறக்கல் சேவை (தார் முதலான வீதி திருத்தத்திற்கான மூலப்பொருட்கள், கட்டட மூலப் பொருட்கள்) |
| B-14 | கனரக வாகனங்கள் / இயந்திரங்கள் திருத்துதல் |
| **தொகுதி C** | **வாகனத் திருத்தமும் சுத்திகரிப்புச் சேவையும்** |
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன சுத்திகரிப்பு /உராய்வு நீக்கிகள், எஞ்சின் ஒயில், சீற் குசன் வேலை. |
| C-02 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |
| C-03 | உழவு இயந்திரம், உழவு இயந்திரப் பெட்டி திருத்தம், ஏனைய வாகனங்களுக்கான திருத்தம். |
| C-04 | நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் மோட்டார் திருத்தம் |
| C-05 | மோட்டார் சைக்கிள் திருத்தம், சுத்திரிகரிப்பு |
| **தொகுதி D** | **ஒப்பந்த வேலைகள் (CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)** |
| D-01 | கட்டட நிர்மானமும் திருத்தமும் |
| D-02 | வீதி நிர்மானமும் திருத்தமும் |
| D-03 | கிணறு /குழாய்க்கிணறு அமைத்தல் |
| D-04 | வர்ணம் பூசுதல். |
| **தொகுதி E** | **உணவு வகைகள்** |
| E-01 | சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள் |
| E-02 | குளிர்பான வகைகள், குடிநீர்ப்போத்தல்கள் |
| E-03 | உலர் உணவுப்பொருட்கள். |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள் / சேவைகள் 2026 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரூபா 1,000.00 இனை செலுத்தி தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
4. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
5. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
6. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குனர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலையங்கள் என்பன தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் சபைக்கு உண்டு.
8. எமது பிரதேச சபையில் வழங்குனர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் தத்தமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமத்தை பெற்றுக் கொண்டமைக்கான சான்றிதழின் பிரதியினை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.
9. விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்குனர்களை பதிவு செய்தல் - 2026"** எனக் குறிப்பிட்டு **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்** என்னும் முகவரிக்கு 17.12.2025 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை 021 225 0144 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.** 03.12.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலச்சரிவில் இருந்து எவ்வாறு எம்மை பாதுகாப்பது?



■ ஜெ. மங்களதர்ஷினி

இலங்கையின் மலையகப் பகுதிகள் அதன் இயற்கை அழகுக்காக மட்டுமல்ல அதன் பாசன வளங்களுக்கும் கலாசார அடையாளங்களுக்கும் பெரிதும் அறியப்படுகின்றன. ஆனால் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சூழலமைப்பு இன்று நிலச்சரிவு அபாயத்தால் கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் மனித வாழ்வியல் சவால்களை எதிர்கொள்கிறது. வருடந்தோறும் மழைக்காலத்தில் மீண்டும் மீண்டும் நிகழும் நிலச்சரிவுகள் உயிரிழப்புகளையும் சொத்துச் சேதங்களையும் ஏற்படுத்துவதோடு நீண்டகால சூழலியல் பாதிப்புகளுக்கும் வழிவகுக்கின்றன.

இலங்கையின் மலைநாட்டில் இயற்கை அடுக்குகளால் நிலம் பலத்தைக் கொண்டிருந்தாலும் கடந்த பல தசாப்தங்களாக மனித செயற்பாடுகள் அந்தச் சமநிலையை மாற்றியமைத்துள்ளன. காடழிப்பு, உயரமான சரிவுகளில் தாவரங்களை அகற்றி புதிய வீடுகள் கட்டுதல், மலைச்சரிவுகளில் வேளாண்மை விரிவு மற்றும் தேவையான நில அளவைத் தாண்டிய சாலை கட்டுமானங்கள் ஆகியவை மண் அடுக்குகளை பலவீனப்படுத்துகின்றன. தாவரங்களின் வேர் மண் கட்டமைப்பைப் பிடித்துக் கொள்ளும் முக்கியமான பங்கு வகிக்கின்றது. அவை அகற்றப்பட்டால் மண் நீரால் நனையும்போது அதன் பிடிப்புத்திறன் குறைந்து நிலச்சரிவு நிகழும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

காலநிலை மாற்றத்தினாலும் நிலச்சரிவு அபாயம் மேலும் தீவிரமாகிறது. மழைவீழ்ச்சியின் முறைமை மெல்லியதாக இல்லாமல் திடீரென அதிகளவில் மழை பெய்யும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. இந்த திடீர் கனமழை மலைத்தடங்களில் நீரழுத்தத்தை அதிகரித்து மண் அடுக்குகள் நகர்வதற்கு காரணமாகிறது. தற்போதைய சூழலில் நிலச்சரிவு என்பது இயற்கையின் தவறு அல்ல. மாறாக மனிதன் மாற்றியமைத்த இயற்கையின் அமைப்பே காரணியாக இருக்கிறது.

## நிலச்சரிவு ஏற்படும் முன் வெளிப்படும் எச்சரிக்கை அறிகுறிகள்

நிலச்சரிவை முற்றிலும் தடுக்க இயலாது. ஆனால் அதன் முன்னோட்டங்களைக் கவனிப்பதன் மூலம் உயிர்களைப் பாதுகாக்க முடியும். பொதுவாக நிலச்சரிவு சம்பவிக்கும் முன் பல இயற்கை அறிகுறிகள் தென்படும். முதலில் வீட்டைச் சுற்றிய நிலத்தில் சிறிய பிளவுகள் தோன்றத் தொடங்குகின்றன. இது மண் அடுக்குகள் மெதுவாக நகர்வதைக் குறிக்கிறது. மின் கம்பங்கள், மரங்கள் அல்லது வேலிகள் திடீரெனச் சாய்வதும் நீரின் ஓட்டம் திசைமாற்றம் அடைவதும் அபாயக்குறிகளாகும். சில சமயங்களில் அடிநிலத்திலிருந்து விசித்திரமான ஒலிகளும் கேட்கலாம். இது மண்சரிவு தொடங்கியிருப்பதற்கான முக்கியமான அறிகுறிகளாகும்.




இத்தகைய அறிகுறிகளை 'சாதாரண மழைக்கால மாற்றங்கள்'என்று பொருட்படுத்தாமல் விட்டுவிடுவது பெரும் தவறாகும். ஒரே ஒரு அறிகுறி கூட மனிதர்கள் உடனடியாக பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையை உருவாக்கக்கூடும்.

## அபாயம் அதிகரிக்கும் நேரங்களில் விழிப்புணர்வுடன் நடந்துகொள்வது எப்படி?

மழை நீடிக்கும் நாள்களில் பொதுமக்கள் அதிகாரபூர்வ எச்சரிக்கைகளை கவனமாக பின்பற்றவேண்டும். அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) வழங்கும் எச்சரிக்கைகள் — மஞ்சள், ஒரேஞ்ச் மற்றும் சிவப்பு — போன்றன அலட்சியம் செய்யக்கூடியவை அல்ல. சிவப்பு எச்சரிக்கை நிலச்சரிவு எந்தநேரத்திலும் நிகழலாம் என்பதை நேரடியாகக் குறிக்கிறது.

பலர் "எதுவும் ஆகாது" என்ற நம்பிக்கையால் வீட்டினுள் தங்கியிருக்க முயல்கிறார்கள். ஆனால் மலையகப் பகுதிகளில் நிலச்சரிவு மிக வேகமாக நிகழக்கூடியதால் அதிகாரிகள் வழங்கும் அறிவுறுத்தல்களை உடனடியாகப் பின்பற்றுவது பாதுகாப்பின் முதற்படி ஆகும்.

நிலச்சரிவு எச்சரிக்கை வந்தவுடன் அபாய பகுதிகளில் வசிப்போர் உடனடியாக வெளியேற வேண்டும். உயர்ந்த சரிவுகள், நீர்வழி பள்ளங்கள், காடழிப்பு அதிகம் உள்ள பகுதிகள் மற்றும் முன்பே நிலச்சரிவுக்கு உள்ளான கிராமங்கள் மிகவும் அபாயகரமானவை. மலையகத்தின் பல பகுதிகளில் சரிவுகள் நேரடியாக கீழ்நோக்கி நகருவதால் மக்கள் வெளியேறும்போது பக்கவாட்டில் நகர்வது பாதுகாப்பானது. ஓடைகள், நதிகள், மின்கம்பங்கள் மற்றும் பெரிய மரங்கள் அருகே செல்லுதல் மிக ஆபத்தானது. இத்தகைய சூழ்நிலைகளில் குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் முதலில் பாதுகாப்பாக மாற்றப்பட வேண்டும். இரவு நேர மழை பெய்யும்போது குடும்பத்தினர் ஒன்றாக இருப்பதை உறுதிசெய்து அவசரநிலையில் எவ்வாறு வெளியேறவேண்டும் என்ற திட்டத்தை முன்கூட்டியே தயாராக வைத்திருப்பது சிறந்ததாகும். நிலச்சரிவு அபாயம் அதிகமான பகுதிகளில் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் அவசரப்பொதி (Emergency Kit) ஒன்றைக் கட்டாயமாக தயாராக வைத்திருக்கவேண்டும். இதில் அடையாள ஆவணங்கள், முதலுதவிப் பொருள்கள், குடிநீர், ரோர்ச்லைற். அவசிய மருந்துகள், குழந்தைகளுக்கான உணவு மற்றும் போர்வை போன்ற பாதுகாப்புப் பொருட்கள் சேர்த்திருக்க வேண்டும். திடீர் வெளியேற்றம் ஏற்பட்டால் இவை உயிர் காக்கும் உதவிகளாக அமையும்.

போக்குவரத்துத் துறைகூட நிலச்சரிவுக் காலத்தில் மிகுந்த சிரமத்தைச் சந்திக்கிறது. மழை பெய்தவுடன் மலையகச் சாலைகள் இடிந்து போக்குவரத்து தடைகள் ஏற்படுகிறது. எனவே தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். பள்ளி மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் மக்கள் பாதுகாப்பான வழிகள் உள்ளதா என்று உறுதிசெய்யாமல் பயணிக்கக் கூடாது. பல இடங்களில் இரண்டாம் நிலை நிலச்சரிவுகள்கூட ஏற்படும் வாய்ப்பு இருப்பதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் வீட்டிற்குள் நுழைவது மிக ஆபத்தானது.

## நிலச்சரிவு நேர்ந்த பிறகு பாதுகாப்பு நடவடிக்கைகள்

நிலச்சரிவு முடிந்தவுடன் மக்கள் உடனடியாக வீட்டுக்குள் திரும்பக்கூடாது. காரணம், முதலாவது சரிவிற்குப் பிறகு இரண்டாம் நிலைச்சரிவுகள் நிகழ்வது மிகவும் சாதாரணம். வீடுகளில் பிளவுகள், சாய்வு அல்லது ஈரப்பதன் அதிகரித்திருந்தால் அவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகே திரும்ப செல்ல வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்து மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். நிலம் நகரும் போது மண் மற்றும் பக்ரிறியாக்கள் இயற்கை நீர்நிலைகளில் கலந்து மாசடையக்கூடியதால் கொதிக்கவைத்த நீர் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கிடையில், அனர்த்தம் தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பது முக்கியமானது. தவறான தகவல்கள் பரவாமல் இருக்க அதிகாரபூர்வ அறிவிப்புகளை மட்டுமே நம்ப வேண்டும். நிலச்சரிவிலிருந்து பாதுகாப்பு என்பது தனிநபர் செயல் மட்டுமல்ல. ஒரு சமூக ஒருங்கிணைப்புச் செயல்முறையும் ஆகும். அண்டை வீட்டாருக்கு அபாயம் குறித்த தகவலை வழங்குவது, முதியோர் மற்றும் நோயாளிகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வது, மேலும் தேவையான உதவிகளுக்காக தன்னார்வமாக முன்வருவது போன்ற செயல்கள் பெரும் பேரிடர்களில் மனித உயிர்களைக் காப்பாற்றிய பல நிகழ்வுகள் உள்ளன.

மேலும், நீண்டகாலத்தில் காடுகளைப் பாதுகாப்பது, பழைய மரங்களை வெட்டாமல் இருப்பது, மலைச்சரிவுகளில் கட்டடங்கள் கட்டும்போது பொறியியல் ஆலோசனைகளைப் பின்பற்றுவது, மழைநீர் வடிகால் அமைப்புகளைச் சீராக பராமரிப்பது ஆகியவை நிலச்சரிவைத் தடுக்க உதவும் முக்கியமான நடவடிக்கைகளாகும். நிலச்சரிவு என்பது இயற்கையின் ஒரு இயல்பான செயலாக இருந்தாலும் மனிதனின் தவறான செயற்பாடுகள் அதனை அதிகரித்து உயிர்களையும் சூழலையும் ஆபத்துக்குள்ளாக்குகின்றன. ஆனால் அதன் எச்சரிக்கைகளைச் சரியாக அறிந்து செயற்பட்டால் பெரும்பாலான உயிர்களைப் பாதுகாக்கமுடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'டித்வா' அனர்த்தமும்

# குழந்தைகள், முதியோர் எதிர்கொள்ளப்போகும் நோய்களும்

■ மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள்
சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை

## தடுத்தல், தற்காப்பு வழிகள்

டித்வா புயலினால் இலங்கையின் வடக்கு, கிழக்கு, மேற்கு, சபரகமுவ, மத்திய மற்றும் தெற்கு மாகாணங்களில் பெரும் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த வெள்ளம் வீடுகள், பயிர்களை மட்டும் அழிப்பதோடு நின்றுவிடாமல், பல திடீர் தொற்றுகள் பரவுவதற்கான சூழலையும் உருவாக்கியுள்ளது. இதனால் குழந்தைகளும், முதியவர்களுமே அதிக ஆபத்தில் உள்ளனர்.

**ஏன் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் அதிக ஆபத்து?**

- உடல் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு
- முதியோர் இயங்கும் திறன் குறைவு
- குழந்தைகள் களிமண் , நீரில் விளையாடுவதால் தொற்று அதிகம்
- மருந்துகள், சிகிச்சைகள் கிடைப்பதில் சிரமங்கள் முன்னிருந்த நோய்கள் (ஆஸ்துமா, சர்க்கரை, இதய நோய்) மோசமடையலாம்.
- சுத்தமான குடிநீர் மற்றும் உணவு கிடைப்பது கடினம்.
- எலிகள், நுளம்புகள் மற்றும் ஈ மூலம் பரவும் நோய்கள் மக்களைப் பாதிக்கும்.

## வெள்ளத்துக்குப் பின்னர் அதிகம் ஏற்படும் நோய்கள்

1. வயிற்றுப்போக்கு, கொலரா போன்ற நீர்மூல நோய்கள்
காரணம்: வெள்ளநீர் கழிவுநீருடன் கலந்து குடிநீர் மாசடைவது அதிகம்.

**அறிகுறிகள்:**
- தண்ணீரைப் போன்று மலம் கழித்தல்.
- வாந்தி
- காய்ச்சல்
- உடல் நீரிழப்பு (குழந்தைகள், முதியோருக்கு ஆபத்து)

2. லெப்டோஸ்பைரோசிஸ் (எலிக் காய்ச்சல்)
எலியின் சிறுநீர் கலந்த வெள்ளநீரில் நடப்பதால் ஏற்படும் கடுமையான நோய்.

**அறிகுறிகள்:**
- அதிக காய்ச்சல்
- தலைவலி
- கண் சிவப்பு
- பலவீனம்
- சிகிச்சை தாமதமானால் சிறுநீரகம்/கல்லீரல் பாதிப்பு மற்றும் உயிரிழப்பு.

3. டெங்கு மற்றும் கொசு மூலம் பரவும் நோய்கள்
காரணம்: காவெள்ளத்துக்குப் பிறகு தேங்கிய நீர் கொசுக்களுக்கு சிறந்த இனப்பெருக்க இடம்.

**அறிகுறிகள்:**
- அதிக காய்ச்சல்
- தலைவலி
- மூட்டுவலி
- வாந்தி
- கடுமையான டெங்கு உயிருக்கு ஆபத்து

4. சுவாச நோய்கள்
குளிர், இருமல், நிமோனியா, ஆஸ்துமா தாக்கம் அதிகரிக்கும்.

காரணங்கள்:
- நெரிசல் அடைந்த தங்குமிடங்கள்
- ஈரமான வீடுகள்
- குறைந்த காற்றோட்டம்

5. தோல் நோய்கள்
தோல் புண்கள்
பூஞ்சைத் தொற்று
காயங்களில் தொற்று
காரணம்: அசுத்தமான வெள்ளநீரில் நீண்ட நேரம் இருத்தல்

6. பாம்புக்கடி
காரணம்: வெள்ளநீரில் இருந்து தப்பிக்க பாம்புகள் வீடுகளுக்குள் புகும் வாய்ப்புகள் உள்ளன.

குடும்பத்துக்கான தற்காப்பு வழிமுறைகள்.

- பாதுகாப்பான குடிநீர்
- தண்ணிரைக் குறைந்தது 5 நிமிடங்கள் நன்றாகக் கொதிக்கவைத்து குடிக்கவும்.
- கிணற்று நீரைச் சுத்தப்படுத்த சுகாதாரப் பிரிவினர் வழங்கும் குளோரின் மாத்திரைகளைப் பயன்படுத்தவும்.
- குடிநீரை வெள்ளநீருடன் கலக்காத தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**உணவுப் பாதுகாப்பு**

- எப்போதும் சூடான, புதிய உணவைச் சாப்பிடவும்
- பச்சைக் காய்கறி / சாலட் என்பவற்றைத் தவிர்க்கவும்
- கெட்டுப்போன வாசனை வரும் உணவு எதையும் உடனே விலக்கவும்
- உலர் உணவுகளை காற்றுப் புகாத பாத்திரங்களில் சேமிக்கவும்



**குழந்தைகளுக்கான சிறப்புப் பாதுகாப்பு**

- வெள்ளநீரில் விளையாட விடாதீர்கள்
- வயிற்றுப்போக்கு ஆரம்பித்தால் உடனே அதிக நீர் மற்றும் ஜீவனி (oral rehydration solution ORS)கொடுக்கவும்
- ஆஸ்துமா உள்ள குழந்தைகளின் மருந்துகள், இன்ஹேலரை அருகில் வைத்திருக்கவும்
- உணவுக்கு முன் மற்றும் கழிவறைக்குப் பிறகு கைசுத்தம் முக்கியமானது.
- தடுப்பூசிகள் (விசேஷமாக டெட்னஸ் / ஈர்ப்பு வலி) சரிபார்க்கவும்

**முதியவர்களுக்கான பாதுகாப்பு**

- சர்க்கரை நோய், அழுத்த நோய், இதய நோய் போன்றவற்றுக்கு மாத்திரைகளை தொடர்ச்சியாகக் கொடுக்கவும்
- நிமோனியா வராமல் பாதுகாக்கவும். முகக்கவசங்கள் பாவிக்கவேண்டும்.
- வழுக்காத பாதணிகள் அணியச்செய்யவும்
- பலம் குறைந்ததால் வெள்ளநீரில் நடப்பதைத் தவிர்க்கவும்
- இரத்த அழுத்தம் / சர்க்கரை சோதனையை அவ்வப்போது செய்யவும்
- லெப்டோஸ்பைரோசிஸ் (எலி காய்ச்சல்) தடுப்பு
- வெள்ளநீரில் நடப்பதைத் தவிர்க்கவும்
- தேவைப்பட்டால் ரப்பர் பூட் அணியவும்
- வெள்ளநீரில் சென்ற பிறகு உடனே சோப்பு கொண்டு குளிக்கவும்

**கொசு / நுளம்புகள் ஒழிப்பு**

- மலர்த் தொட்டிகள்,ரயர்கள், கூரையில் உள்ள தேங்கிய நீரை அகற்றவும்
- பகலிலும் இரவிலும் இயலுமானவரை கொசு வலை பயன்படுத்தவும்
- கொசு விரட்டும் திரவம் / கிரீம் பயன்படுத்தவும்
- வெள்ளத்துக்குப் பிறகு 2 வாரங்கள் நுளம்புக் கட்டுப்பாட்டுக்கான மிக முக்கியமான காலமாகும்.

**மனநலம் கவனிப்பு**


- குழந்தைகளுக்கு வெள்ளத்தால் பயம், பதற்றம் ஏற்படும் - அமைதியாகப் புரியவைத்து நம்பிக்கை அளிக்கவும்
- முதியவர்கள் மனஅழுத்தத்தில் இருக்கலாம் - குடும்ப ஆதரவு தேவை
- சாப்பாடு மற்றும் தூக்க நேரத்தை ஒழுங்காக வைத்துக்கொள்ளவும்

**உடனே மருத்துவரை அணுக வேண்டிய நிலைகள்**

- 48 மணித்தியாலத்துக்கும் மேலாக நீடிக்கும் காய்ச்சல்
- கடுமையான வாந்தி / வயிற்றுப்போக்கு
- சுவாசப்பாதிப்பு.
- குறைந்த அளவில் சிறுநீர் வெளியேறுதல்
- கடுமையான வயிற்றுவலி
- டெங்கு எச்சரிக்கை அறிகுறிகள் (இரத்தக்கசிவு, தொடர்ச்சியான வாந்தி, தூக்கமின்மை)
- பாம்புக்கடி - காயங்களை வெட்டாதீர்கள், கட்டிக் கொள்ளாதீர்கள்; உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவும்

இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட அசாதாரண சூழல். இயல்பானதாகி வரும்நிலையில், எளிய தற்காப்பு நடவடிக்கைகளால்-குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்களைப் பாதுகாப்பதன் மூலம் - தொற்றுகளைத் தடுக்கவும், உயிரிழப்புகளைக் குறைக்கவும் முடியும். சுத்தமான நீர், நுளம்புக் கட்டுப்பாடு, உணவுப் பாதுகாப்பு, மற்றும் விரைவான சிகிச்சை ஆகியவை குடும்பங்களைப் பாதுகாப்பதில் முக்கியமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனுக்குலத்தை காலம் காலமாகக் கட்டிப்போட்டுள்ள மூடநம்பிக்கைகள் தொடர்பில், கடந்த வாரம் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சியே இது.

# மூடநம்பிக்கைக்கு எதிராக போரிடுவது அவசியம்

ஆனையூர்க்கவிராயர்

சாதியப் பிரிவினை என்பது, மொழி, கலை, கலாசாரம் போன்ற இனத்துவ அடையாளங்களைப் போல சமூகத்தில் ஊடுருவி வளர்ச்சி கண்டுள்ள ஒரு கோட்பாடாகும். இது எமது யாழ் மண்ணின் வாழ்வியலிலும் பின்னிப்பிணைந்து தன்னை இனங்காட்டுகிறது. யாழ் மண்ணில் சாதியப் பிரிவினையின் ஏகாதிபத்தியப் போக்கு படிப்படியாகக் குறைந்துவருவது நல்ல அறிவியல் மாற்றமாயினும் கடலினுள்ளே அமிழ்ந்து தன்னை இலேசாக வெளிக்காட்டும் பனிப்பாறையைப் போன்றதோவென ஐயுற வேண்டிய அளவிற்கு அரிதாக சில சம்பவங்கள் நடைபெறுவதும் யதார்த்தமாகும்.

நான் இவரில் பார்க்க உயர்ந்தவன் என எண்ணி பெருமிதமடைவது பொது மனித சுபாவம். அந்தவகையில் படித்தவன்பாமரன், பணக்காரன்ஏழை, தூய்மையானவன்-அசுத்தமானவன், நல்லவன்-கெட்டவன் என்ற பௌதிகவியல் வேறுபாடுகள் காணப்படுவது தவிர்க்க முடியாதது. ஒரு மக்கள் சமூகத்தின் தொடர்ச்சியான பொருளாதாரக் கீழ்நிலை, கல்வியறிவீனம், சுகாதாரச் சீர்கேடுகள் மற்றும் இந்தக் காரணிகள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய மோசமான நடத்தைகள், பண்பீனங்கள் காரணமாக ஒரு மக்கள் குழாத்தில் வெறுப்புணர்வை ஏற்படுத்துமாயின் தவிர்க்கவியலாது. ஆனால் இவையெல்லாவற்றினதும் கூட்டுவடிவமாக சாதீயம் கட்டியெழுப்பப்பட்டிருப்பதே விரும்பத்தகாத நடைமுறையாகும்.

## அடிப்படையும் ஆரம்பமும்

தொழில் ரீதியிலான பிரிவினைகளையும் இதனுடன் உட்சேர்க்கமுடியும். தாழ்ந்த வகுப்பினர் உயர்ந்த வகுப்பினரின் வீடுகளுக்குள் ஆலயங்களுக்குள் உட்செல்ல அனுமதிக்கப்படாமையும் இங்கு நோக்கற்பாலது. பண்டைய காலத்தில் அறிவாற்றலற்றவர்கள் தமது உழைப்பை விற்றே தம்மையும் தமது குடும்பத்தையும் காப்பாற்றவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அப்போதைய தொழில் வழங்குநர், தொழில் பெறுநர் உறவில் மிகக்கூடிய உழைப்புக்கு மிகக் குறைந்த ஊதியத்தையே பெறவேண்டியுமிருந்தது. இத்தகைய உழைப்பாளர்களும் உழைப்பு மிகுதியால் அழுக்கு நிறைந்த மேனியராய் காணப்படும் நிலையில் உயர் சாதியினரான தொழில் வழங்குநர்களின் வீடுகளுக்குள்ளேயோ ஆலயங்களுக்குள்ளேயோ பிரவேசிக்க அனுமதிக்கப்படவில்லை. அதிலொரு நியாயம் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் நீராடி தூய ஆடை தரித்து தூய்மையுடன் வந்தபோதிலும் அவர்கள் உட்செல்ல அனுமதியில்லை. இது ஒரு வகை உளவியலின் நாளாந்த வளர்ச்சி. இதுவே சாதியக் கட்டமைப்பின் விசுவரூபமான தோற்றம் வளர்ச்சியுற காரணியாக இருந்திருக்கலாம். இவ்விடத்தில் தெல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு விட யத்தையும் இங்கு சுட்டிக்காட்டுதல் தகும்.




தாழ்ந்த வகுப்பினர் எனப்படும் பஞ்சமர் முற்பிறப்பில் செய்த வினைப்பயனாக ஏவல் செய்யப் பிறந்தவர்கள் அவர்களுக்கு கல்வியுரிமை முதலாய எவ்வுரிமையும் கிடையாது. இது எவ்வளவு மோசமான நம்பிக்கை. முற்பிறப்பு மறுபிறப்பு என்ற மாயையைக் காரணம் காட்டி ஒரு மக்கள் குழாம் எப்படி கீழ்மைப்படுத்தப்பட்டுள்ளது என்பது அறிவார்ந்த சிந்தனையுள்ள எவருக்கும் விளங்கும். தம்மைக் காட்டிலும் பல வழிகளிலும் கீழ்மைப்பட்ட ஒரு மக்கள் குழாத்தை வெறுப்பதும் அவர்களை நண்பர்களாகவோ அல்லது உறவினர்களாகவோ ஏற்றுக்கொள்ளாமல் தவிர்ப்பதும் அவரவர் சொந்த விருப்பு வெறுப்பின் பாற்பட்டது. ஆனால் மொழி, கலை, கலாசாரம் மற்றும் பிரதேச ரீதியாக ஒன்றித்த அதே மக்கள் குழாத்தை விலங்குகளிலும் கேவலமாக எண்ணுவது நடாத்துவது ஒரு வேண்டத்தகாத செயலாகும். நாம் உலக வாழ்வு பற்றிய எவ்வித கற்பனை மாயைகளுமற்ற விஞ்ஞான பூர்வமான பேருண்மைகளை கட்டாயம் விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த வகையில் ஒரு காட்டுக்கும் நாட்டுக்கும் இடையேயுள்ள அத்தனை வேறுபாடுகளும் மனிதனின் கைவண்ணமே. அதுவும் ஒரேநாளில் ஒரு சிலரால் உருவாக்கப்பட்டவையல்ல இவ்வேறுபாடுகள். பல்லாண்டுகால நமது மனித இனத்தின் நீட்சி, விடாமுயற்சி, பல்வேறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் அனைத்தினதும் கூட்டுவிளைவே இன்றைய உலகில் நாம் வாழும் வாழ்க்கை. அவ்வவ் காலப்பகுதியின் அறிவுநிலைக்கேற்ப நம்பிக்கைகளும் வளர்ந்திருப்பது தவிர்க்கமுடியாதது. இன்றைய நவீன விஞ்ஞானம் பிரபஞ்சப் பேருண்மைகளை எல்லாம் படித்தவர் முதல் பாமரர் வரையான அனைத்து தரப்பினரும் விளங்கிக்கொள்ளும் வகையில் தனது கண்டுபிடிப்புகள் மூலம் படம் பிடித்துக் காட்டுகிறது. வெறும் கற்பனை மாயைகளால் கட்டுண்ட மக்களை அறிவியல் விற்பன்னர்களாக்கி விழிப்புணர்வு பெற வழிகாட்டுகிறது.

## இளைஞர்களின் பணி

இன்றைய இளம்சமூகத்தினர் தமிழ் மண்ணை அறிவார்ந்த நன்மக்களின் செறிவார்ந்த பூமியாக மாற்றுவதற்கு முன்வரவேண்டும். வீடுகள் தோறும் விழிப்புணர்வாளர்களை உருவாக்கவேண்டும். அர்ப்பணிப்பான கல்வியும் ஓய்வில்லாத உழைப்பும் மனிதாபிமான சிந்தனையும் வன்முறையை வெறுக்கும் அன்பமைதியான மனவொழுங்கும் கொண்டவர்களாக தம்மை வடிவமைக்க வேண்டும்.

ஆழ்மனதில் பதிந்துள்ள மூடநம்பிக்கைகளையெல்லாம் வேரோடு வீழ்த்தி மக்கள் மனதில் விழிப்புணர்வு எனும் விதையை நிலைநாட்டி அறிவியல் ஒளியூட்டி நேரிய வழிகாட்டி மன மாற்றத்திற்கு வித்திடவேண்டும்.

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் இசைவியலிலேயே நாம் வாழும் பூமியின் அசைவியல் நர்த்தனம் நிகழ்கின்றது. இதை உணர்ந்து: நாளாந்த வாழ்வினை நகர்த்திச் செல்லும் மனவோர்மம் மிக்கவர்களாக ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் வாழும் மனமாற்றம் உருவாக வேண்டும்.



நந்தன்

# கூட்டுறவு வளர்ச்சிக்கு வித்திட்டவர் வீரசிங்கம்

சமூக நலனுக்காகவும், கூட்டுறவு நலனுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து எல்லை கடந்த தியாகங்களைப் புரிந்து மக்களின் இதயக் கமலத்தில் களங்கமற்ற நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டவரே கூட்டுறவுத் தந்தை பெரியார் வீரசிங்கம். வீரமும் தியாகமும் நிறைந்த யாழ்.மண்ணின் மாபெரும் கூட்டுறவுப் பொக்கிஷமாக விளங்கிய அவர் கல்வி வளர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுக்கும், கூட்டுறவு வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டார். இலங்கையின் கூட்டுறவு வளர்ச்சிக்கு சமூக சேவையை தனது ஆயுட்காலம் வரைக்கும் பெரும் பணியாகக் கொண்டு செயற்பட்ட பெரியாரின் தியாகம், கொள்கைகள், சேவைகள் என்பன போற்றுதற்குரியதாகும்.

இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் தீவின் வடபாங்கில் அமைந்துள்ள யாழ்ப்பாணத் திருநாட்டின் நீர், நில வளத்துடன் சிறந்து விளங்கும் நவாலி என்ற திருக்கிராமத்தில் கல்வியிலும், அறிவிலும், நற்பண்புகளிலும் சிறந்து விளங்கிய விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதியினருக்கு தவப்புதல்வனாக 1892ஆம் ஆண்டு ஆடி மாதம் ஏழாம் திகதி பெரியார் வீரசிங்கம் பிறந்தார்.


தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்ற அவர் கல்வித்துறையில் சிறந்த கல்வியியலாளராக விளங்கினார். இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு அயராது பாடுபட்டார். 1936ஆம் ஆண்டு நாட்டில் முதலாவது கூட்டுறவு மருத்துவமனைச் சங்கம் மூளாயில் உருவாகி பதிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டுறவு இயக்கத்தை வெற்றிகரமாக செயற்படுத்தி அவற்றை இயங்கவைத்த பெருமை வீரசிங்கத்தையே சாரும். அவரால் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டுறவு இயக்கத்தால் நாட்டில் பெரும்பாலான மக்கள் அதிக நன்மை அடைந்தார்கள்.

மக்களை மதிக்கும் சிறந்த பண்புகளைக் கொண்ட தலைமைத்துவத்தால் கூட்டுறவு இயக்கம் கொடி கட்டிப்பறந்தது. அரசியலுக்கு அப்பால் கூட்டுறவு, நாட்டுயர்வு என்ற பண்புகளுக்கு அப்பால் கூட்டுறவு சிறந்து விளங்கியது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பார்கள் கூட்டுறவாளர்கள் சகலரும் ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்தால் கூட்டுறவை மேலும் கட்டியெழுப்பமுடியும். பெரியாரின் உயர்ந்த தியாகங்களுக்கும் அர்ப்பணிப்புகளுக்கும் களங்கமேற்படாமல் பாதுகாப்பதுவே நாம் அவருக்குச் செய்யக்கூடிய நன்றிக்கடனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நா.உசாந்தினி

# கிரவல் அகழ்வால் அழியும் இயற்கை!





இன்றைய உலகில் வளர்ச்சி மற்றும் நகரமயமாக்கல் என்பன மிகத் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதனால், கட்டடத்துறையிலும் போக்குவரத்து துறையிலும் பெருமளவுக்கு கிரவல் மற்றும் கற்கள் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதற்காக இரையாக்கப்படுபவை கிராமங்களே. இன்று ஏராளமான கிராமங்களில் கிரவல் அகழ்வு வகைதொகையின்றி இடம்பெற்றுவருகின்றன.

கிரவல் அகழ்வு சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் இடம்பெறுகின்றது. சூழலின் முக்கியத்துவம் உணராமல் ஒவ்வொருவரின் சுயநலத்துக்காக நாட்டிலுள்ள வளங்களை கேள்விக்கு உள்ளாக்குகின்றனர். ஒவ்வொரு வளமும் மனித வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு முக்கியமானவை என்பதனை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். பௌதிகச் சூழல் மற்றும் பண்பாட்டுச் சூழல் என இரண்டு வகையாக சூழலை நோக்க முடியும். இதில் பண்பாட்டுச் சூழல் மனிதனால் உருவாக்கப்படுவதாகும். பௌதிகச் சூழல் என்பது இயற்கைச் சூழலில் மனிதனுக்குக் கிடைக்கத்தக்கது.

சூழலில் இருந்து பெறப்படும் வளங்கள் புதுப்பிக்கக் கூடிய வளம் மற்றும் புதுப்பிக்கமுடியாத வளங்கள் என இரு வகையாக காணப்படுகின்றன. உதாரணமாக கடலில் இருந்து மீன்வளத்தைப் பெறுகின்றபோது அந்த மீன்வளம் குறுகிய காலத்தில் மீளவும் உருவாகும் வளமாக காணப்படுகிறது. ஆனால் காடுகளில் இருந்து மரங்களையும், கிரவல் போன்ற கனிய வளங்களையும் பெறுகின்றபோது அவை மிக நீண்டகாலத்தின் பின்பே மீள உருவாகும் வளங்களாக காணப்படுகின்றன. எனவே இவ்வாறான நிலையில் உள்ள வளங்களைத் திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் வளங்களை அழிவடையாது பாதுகாக்கமுடியும். இல்லையெனில் அதன் பாதிப்பானது மனிதகுலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன் வன்னிப்பகுதியில் நிலவிய காலநிலைக்கும் தற்காலத்தில் காணப்படுகின்ற காலநிலைக்கும் இடையில் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் பயிற்செய்கையில் போதுமான விளைச்சல் இல்லை, சூழலில் காணப்பட்ட பல்லின உயிரினங்கள் அழிவடைகின்றன, தொற்றுநோய்த் தாக்கம் என்பன இடம்பெறுகின்றன. மனிதனால் இயற்கையின் சமநிலையில் ஏற்பட்ட குழப்பமே இந்த நிலைமைக்கு முக்கியமான காரணமாகும். மேலும் யுத்தத்தில் பாதிப்புகளுக்கு அதிகம் உள்ளாகிய கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களில் அதிக அளவு உட்கட்டுமான பணிகளை மேற்கொள்ளவேண்டிய தேவை காணப்படுகின்றன. இந்த தேவையைப் பூர்த்திசெய்வதற்காக அதிகளவான கிரவல் அகழப்படுகின்றது. இது மிகப்பெரிய சூழலியல் பிரச்சினையாக காணப்படுகின்றது. குறிப்பாக, வவுனியா வடக்கில் கனகராயன்குளத்தில் இடம்பெறும் கிரவல் அகழ்வு வகைதொகையற்றது.

## கிரவல் அகழ்வால் ஏற்படும் பாதிப்புகள்

இதனால் ஏற்படுகின்ற தாக்கம் பற்றி நோக்குகின்றபோது ஆரம்பத்தில் வேளாண்மை மற்றும் பிற பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட நிலங்கள் கிரவல் அகழ்வின் பின் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக கனகராயன் குளத்தில் சென்ற வருடம் ஒரு ஏக்கர் காணியில் 400 கிலோ உளுந்து அறுவடை செய்யப்பட்டது. ஆன்றால் இன்று இந்த நிலம் கிரவல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்டு குன்றும் குழியுமான தரிசு நிலமாக காணப்படுகிறது. இதனால் காலநிலை மாற்றம் ஏற்படுகின்றது. கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற காணிக்கு அருகாமையில் உள்ள விவசாய நிலங்களின் விளைச்சலும் பாதிக்கப்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. உதாரணமாக விவசாய நிலங்களுக்கு அருகில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றபோது மழைக்காலத்தில் விவசாய நிலங்களில் காணப்படுகின்ற நீர் முழுமையாக வழிந்து ஓடுகின்ற போது வறட்சியால் பயிர்கள் அழிவடைகின்றன.

கிரவல் அகழ்வால் கால்நடை வளர்ப்பும் பாதிப்படைகின்றது. அதாவது, கால்நடை மேய்ச்சலுக்காக பயன்படுத்திய நிலங்கள் குறைந்து செல்கின்றன. மேய்ச்சல் இல்லாததால் ஆடுகள், மாடுகளுக்கு போதுமான உணவினைப் பெறமுடியாமல் பால், இறைச்சி போன்ற உற்பத்தி கள் வீழ்ச்சியடைகின்றன. கிரவல் அகழ்வால், காற்று மற்றும் ஒலி மாசுபாடும் ஏற்படுகின்றது. அதாவது அகழ்வுப் பணிகள் மற்றும் கிரவலை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களின் போக்குவரத்தின் போது அதிகப்படியான தூசி காற்றில் கலக்கிறது. இது அந்தப்பகுதி மக்களின் ஆரோக்கியத்தை குறிப்பாக சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. மேலும் வெடிமருந்துகளைப் பயன்படுத்துதல் அல்லது கனரக இயந்திரங்களை இயக்குதல் போன்றவற்றால் அதிக சத்தம் மற்றும் அதிர்வுகள் ஏற்படுகின்றன. இதனால், அருகிலுள்ள குடியிருப்புகளில் வாழும் கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் பாதிப்படைகின்றனர். நிலத்திலிருந்து மூன்று அடி வரைக்குமே கிரவல் தோண்ட முடியும். ஆனால் கனகராயன் குளம் வடக்கு பெரியகுள ஆயுர்வேத மருத்துவமனைக்கு பின்னால் உள்ள கிரவல் குவாரிகளில் கிட்டத்தட்ட 12 அடிவரை தோண்டப்பட்டுக் காணப்படுகிறது.

## இயற்கைப் பாதிப்பை எவ்வாறு தடுப்பது?

கிரவல் அகழ்வால் ஏற்படுகின்ற சுற்றுச்சூழல் பாதிப்புகளைத் தடுப்பதற்கான நிரந்தர மற்றும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் காணப்படுகின்றன. இந்தத் தீர்வுகள் அகழ்வு முறைகளைக் கட்டுப்படுத்துவது, மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துவது மற்றும் மறுசீரமைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன. அகழ்வு ஆழத்தைக் கட்டுப்படுத்துதல், அகழ்வு தொடங்குவதற்கு முன், வளமான மேல்மண்ணை அகற்றி, தனியாகப் பாதுகாத்து வைத்தல், அகழ்வு நடைபெறும் இடத்தைச் சுற்றி மழைநீர் மற்றும் ஓடைநீர் முறையாக வடிந்து செல்ல, வடிகால் கால்வாய்களை அமைத்தல், அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த பின்னர், நிலத்தை அதன் முந்தைய நிலைக்கு மீளக் கொண்டுவருதல், அகழ்வுப் பணியின்போதே, ஒரு பகுதி கிரவல் அகழ்ந்தவுடன், அந்தப் பகுதியை உடனடியாகச் சீரமைத்து, தாவரங்களை நடுதல்; என்றவாறாக அந்தத் தீர்வுகள் அமைகின்றன. அபிவிருத்திக்காக கிரவல் அகழப்படுவதைத் தவிர்க்க முடியாது, ஆனால் அந்தக் கிரவலை கொண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியால் கிடைக்கும் நன்மையை விட கிரவல் அகழ்வினால் கிடைக்கும் பாதிப்பு அதிகமாகும். ஒவ்வொரு மனிதனும் இயற்கையை நேசிக்கின்ற மனிதனாக மாறவேண்டும். சூழல் பற்றிய கல்வியையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தவேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும். ■

# இயற்கையைப் பேணி வாழ்!



இயற்கையின் சீற்றம்
செயற்கைகள் குலைந்தது

இறைவன் படைத்தவை
நிறைவெழில் மிகுந்தவை.

மின்சாரம் தொலைபேசி
இன்பொருள் வான்படை

எல்லாம் தொலைத்திட வல்லதெம் இயற்கையே
அனர்த்தம் விளைந்திட சனத்திரள் மாய்ந்தது

ஒன்லைன் ஒளித்தது
வன்நிலை வலுத்தது
விழித்தது இறைவழி செழித்தது அருள்மொழி

மனிதனின் விஞ்ஞானம் தனித்தொளிர்
வலிமைஇல்

இயற்கையாம் இறையருள் செயற்கையால் மாய்வதில்

பொய்களவு புரட்டுவாழ்
செய்கொலை மதுபோதை

உன்திறன் உயர்ந்ததில்
நன்நிலை நின்செயல்

பட்டங்கள் கல்வியா?
சட்டங்கள் உன்னதா?

மானிடா உன்பொருள் தானிடர் தரும் வளம்
இயற்கையைக் கொன்றுநீ செயற்கையால் வென்றிலை
இயற்கையைப் பேணிவாழ் செயற்கெழில் தெய்வமே

நெடுந்தீவு செ.மகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநெல்வேலி...

வைக்கப்பட்டுள்ள விளக்கமறியல் கைதி ஒருவரின் திட்டமிடலுடன், அவரின் அறிவுறுத்தலுக்கு அமையவே நடைபெற்றதாக தெரியவந்துள்ளது. அத்துடன், கொலை நடைபெறுவதற்கு முதல்நாள் தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள வீடொன்றில் கொலைக்கான ஒத்திகையும் நடைபெற்றுள்ளது.

**6 பேர் கைது**

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சந்தைக்கு அண்மித்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கண்காணிப்பு கமராக்களின் பதிவுகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்து, தாக்குதலாளிகள் தப்பிச் சென்ற தடத்தை பொலிஸார் பின்தொடர்ந்தனர். இதன்போது, வன்னிப் பகுதியில் வைத்து தாக்குதலாளிகள் இருவரும், அவர்களை ஏற்றிச்சென்ற வாகனச் சாரதியுமாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்து விசாரணைகளை முன்னெடுத்த தன் அடிப்படையில், படுகொலை செய்யப்பட்ட இளைஞரின் நடமாட்டங்களை வேவுபார்த்து தகவல் வழங்கியவர், சம்பவ தினத்தன்று இளைஞரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து தகவல்களை வழங்கியவர்கள் என மூவர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்ட தாக்குதலாளிகளான மேலும் இருவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர்களையும் கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவருவதாவது,

**நீண்டகாலப் பகை**

யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு வன்முறை கும்பல்களுக்கு இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் மோதல் சம்பவத்தின் தொடர்ச்சியாக கொக்குவில் சந்தைக்குள் கடந்த மாதம் இளைஞர் ஒருவரை சிலர் தலைக்கவசம் உள்ளிட்டவற்றால் மிக மோசமாக தாக்கியிருந்தனர். அது தொடர்பான கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகள் சமுக வலைத்தளங்கள், ஊடகங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் ஜெயசந்திரமூர்த்தியும் நாடாளுமன்றில், யாழில் இயங்கும் வன்முறை கும்பல்கள், வட்டி தொழிலில் ஈடுபடும் மாபியாக்களை கட்டுப்படுத்த வேண்டும் என கோரியிருந்தார். அதனால் பொலிஸாருக்கு ஏற்பட்ட கடும் அழுத்தம் காரணமாக, கொக்குவில் சந்தைக்குள் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரை கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, நீதிமன்ற உத்தரவில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

**சிறைக்குள் இருந்து திட்டம்**

விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர், தன்னை சிறைக்கு அனுப்பிய நபர்களின் கையும் காலும் வேண்டும் என கந்துவட்டி தொழிலில் ஈடுபட்டு வரும் தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு கூறியுள்ளார். அதனையடுத்து அவரின் ஒழுங்கமைப்பில் நான்கு இளைஞர்கள் தாக்குதலுக்குத் தயார் படுத்தப்பட்டனர்.

**ஒரு மாத வேவு**

படுகொலை செய்யப்பட்ட இளைஞரின் வீட்டுக்கு அருகாமையில் வசிக்கும் இளைஞர் ஒருவரிடம் இருந்து அவர் செல்லும் இடங்கள் தொடர்பான வேவுத் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இதன்படி, கொல்லப்பட்ட நபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் வைப்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை செல்வார் என்ற தகவல் பெறப்பட்டு, ஞாயிற்றுக்கிழமையே தாக்குதல் நடத்துவது என நாள் குறிக்கப்பட்டது. அத்துடன், தெல்லிப்பழையில் வட்டித் தொழிலில் ஈடுபடும் நபருக்குச் சொந்தமான வீடொன்றில் தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டு தாக்குதலுக்கான ஒத்திகையும் பார்க்கப்பட்டுள்ளது.

**சம்பவ தினத்தன்று**

சம்பவ தினத்தன்று இருவர் மோட்டார் சைக்கிளில் திருநெல்வேலி சந்தையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள உணவகத்துக்கு அருகாமையில் காத்திருந்துள்ளனர். மேலும் இருவர் திருநெல்வேலி சந்தைக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் காத்திருந்துள்ளனர்.

கொக்குவிலில் இருந்து இளைஞன் தனது நண்பனின் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டதும், கொக்குவில் பகுதியில் இருந்தே இருவர் மோட்டார் சைக்கிளில் அவர்களைப் பின் தொடர்ந்து வந்துள்ளனர்.

திருநெல்வேலி சந்தி சிக்னல் விளக்கை தாண்டி மோட்டார் சைக்கிள் பயணித்ததும், திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில், தாக்குதலுக்காக காத்திருந்தவர்களும் இளைஞரைப் பின் தொடர்ந்துள்ளனர்.

சந்தியில் இருந்து 500 மீற்றர் வந்ததும், உணவகத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் தாக்குதலுக்கு தயாராக காத்திருந்தவர்கள், படுகொலையான இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே தமது மோட்டார் சைக்கிளை செலுத்தி, மோட்டார் சைக்கிளை வழி மறித்து, வாள்வெட்டுத் தாக்குதலை நடத்த முயற்சித்துள்ளனர். இதையடுத்து, அந்த இளைஞன் இறங்கி வீதியில் ஓடியுள்ளார்.

அவ்வேளை, இளைஞனை பின் தொடர்ந்து வந்த மற்றைய இரு தாக்குதலாளிகளும் இடையில் வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அவர்களிடம் இருந்து தப்பியோட முயன்றும் கடுமையான வெட்டுகாயங்களால் தொடர்ந்து ஓடமுடியாமல் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு முன்பாக விழுந்துள்ளார். இதையடுத்து, இளைஞனின் காலை வெட்டித் துண்டாக்கி விட்டு தாக்குதலாளிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

**வன்னியில் வைத்துக் கைது**

சம்பவம் தொடர்பில் கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர், தாக்குதலாளிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்ற பாதைகளைக் கண்டறிந்தனர்.

அதன் அடிப்படையில் வாகனம் தொடர்பிலான தகவல்களை பெற்றவேளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வாகனம் வன்னிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், வாகனத்தை பொலிஸ் குழு வழிமறித்தவேளை, வாகனத்தினுள் தாக்குதலாளிகள் இருவர் மற்றும் அவர்கள் தப்பி செல்ல உதவிய வாகன சாரதி, தாக்குதல் சம்பவத்தை வழி நடத்தியவரான கந்துவட்டி தொழில் செய்யும் தெல்லிப்பழையைச் சேர்ந்த நபர் ஆகியோரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும், அவர்கள் பயணித்த வாகனத்தையும் மீட்டு யாழ்ப்பாணம் கொண்டு வந்தனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் தாக்குதலுடன் தொடர்புடைய மேலும் இருவர் தலைமறைவாகியுள்ளனர்.

**சான்றுப் பொருள்கள்**

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து இதுவரை, தாக்குதலாளிகள் தப்பிச் சென்ற வாகனம், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், வாள், தாக்குதல் நடத்தும்போது அணிந்திருந்த ஆடைகள் என்பவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மல்லாகம், தெல்லிப்பழை மற்றும் கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த 20 தொடக்கம் 25 வயது வரையிலானவர்கள் எனவும் தெரியவருகின்றது. அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், 24 மணிநேரம் பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகளை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

## அஸ்வெசும...

கப்பட்டிருந்த கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. தகவல் புதுப்பிப்பு நடவடிக்கைகளுக்கான இறுதித் திகதியாக டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலையில், நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக அந்தக் காலவரையறையை எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிப்பதாக நலன்புரி நன்மைகள் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## 500ஐ...

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 4 இலட்சத்து 7 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த 14 லட்சத்து 66 ஆயிரத்து 615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

புயலால் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் மீட்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மீட்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஏனைய பல மாவட்டங்களில் இருந்தும் தன்னார்வக் குழுக்கள் களமிறங்கியுள்ளன.

மீட்புப் பணிகளுக்காக பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடன் நன்கொடைகளை வழங்கி வருகின்றனர். குறிப்பாக புலம்பெயர் உறவுகளும் நன்கொடைகளில் தாராளம் காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இடர்மீட்புப் பணிகளுக்கு வழங்கப்படும் ஒத்துழைப்பை ஆளுநர் நா.வேதநாயகன் வெகுவாகப் பாராட்டியுள்ளார். எனினும், தேவையற்ற குழப்பங்கள் மற்றும் மோசடிகள் இடம்பெறாமல் இருப்பதற்காக, மாவட்டச் செயலர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள 'இடர் முகாமைத்துவக் குழுக்களை' தொடர்புகொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-ம)

## டிசெம்பர்...

லாளர் நாலக கலுவெல இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை மீண்டும் இயங்க வைப்பது தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றோம். போக்குவரத்துத் தடைகள், தகவல் தொடர்பு சிக்கல்கள் மற்றும் மின் தடைகளால் பாதிக்கப்படாத மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் டிசெம்பர் 16ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும். ஏனைய பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பில் மாவட்ட, மாகாண அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுகள் எடுக்கப்படும்.

இதேவேளை, வானிலையால் பாதிக்கப்படாத பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள் டிசெம்பர் 8ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும். அத்துடன் ஏதேனும் உயர்கல்வி நிறுவனம் நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொண்டால், அவற்றை திறப்பது தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்படும் - என்றார். (அ-ம)

## வெள்ளத்தில்...

அநுர ஏற்கனவே அறிவித்திருந்தார். இவ்வாறான நிலையிலேயே, அந்தத் தொகை தற்போது 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளையடுத்து ஜனாதிபதி வழங்கிய அறிவுறுத்தலின் பேரில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்துக்காக 7.5 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

## ஜனவரி...

செயலாளர் நாலக கலுவெல இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

நாட்டில் நிலவிய அசாதாரண காலநிலை காரணமாக உயர்தரப் பரீட்சைகள் சிலவற்றை நடத்த முடியவில்லை. அந்தப் பரீட்சைகள் ஜனவரி மாதத்தின் ஆரம்பத்திலேயே நடத்தப்படும். திகதி உள்ளிட்ட ஏனைய விவரங்கள் விரைவில் தெரிவிக்கப்படும் - என்றார். (அ-ம)

## முன்னாள்...

ளார். இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த அவர், வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார். இதன் தொடர்ச்சியாக நேற்று மாலை அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணப்பொருள்களைக் கையளிக்க மாவட்டச் செயலகத்தில் கருமபீடம்

யாழ்ப்பாணம், டிசெ.3

இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப்பொருள்களைக் கையளிக்க விரும்புவோர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொருள்களைக் கையேற்கும் கருமபீடத்தில் அவற்றை ஒப்படைக்க முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருள்களை வழங்க விரும்பினால் இந்தக் கருமபீடத்தில் அவற்றை ஒப்படைக்கமுடியும் என்றும், அதற்குப் பொறுப்பாகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிவாரணப்பொருள்களை வழங்க முன்வரு வோர் தாங்கள் வழங்கும் பொருள்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் பொருள்கள்தொடர்பானவிவரங்களைக் குறிப்பிட்டு ஒப்படைக்கமுடியும் என்றும் உரிய பதிவுகளுடன் பொருள்களைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-27)



கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையால் யாழ்.குப்பிழானில் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில் மழைவெள்ளத்தை விவசாயிகள் சிலர் நீர் இறைக்கும் இயந்திரங்கள்மூலம் வெளியேற்றி வருகின்றனர். (ச-66)

# கால்நடைகளை மீட்க அவசர தொடர்பு எண்கள்

கொழும்பு, டிசெ.3

நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அல்லது சிக்கியுள்ள செல்லப்பிராணிகள், கால்நடைகள் மற்றும் தெரு விலங்குகளுக்கு உதவ இலங்கை கால்நடை மருத்துவச் சங்கம் தயாராகவுள்ளது. 0716000 666, 071414 5242, 070 610 3808 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு மக்கள் தகவல் வழங்கமுடியும். மீட்பு அல்லது மருத்துவப் பராமரிப்புத் தேவைப்படும் விலங்குகளைக் கண்டால், இந்தத் தொடர்பு எண்களுக்குத் தகவல் வழங்கமுடியும் என்று சங்கத்தின் தலைவர் சுகத் பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். (க-இ)

# குடிதண்ணீர் பயன்பாட்டில் அவதானம்

கொழும்பு, டிசெ.3

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் குடிதண்ணீரைப் பயன்படுத்தும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிணற்று நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்றும், வயிற்றுப் போக்கு போன்ற நீரால் பரவும் நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகமாக இருப்பதால், கொதித்து ஆறிய நீரை அருந்துவது அவசியம் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குடா அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

## எய்ட்ஸால்...

கு.சந்திரகுமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது 7 ஆயிரத்து 168 பேர் எய்ட்ஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஆண்களில் எண்ணிக்கை 5 ஆயிரத்து 544 என்றவாறாகவும், பெண்களின் எண்ணிக்கை ஆயிரத்து 603 என்பதாகவும் அமைந்துள்ளது. மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த 21 பேரும் எய்ட்ஸ் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை இதுவரை 43 பேர் எய்ட்ஸ் தொற்றுக்கு ஆட்பட்டுள்ளனர். அவர்களில் 34 பேர் சிகிச்சைக்கு உட்பட்டு வருகின்றனர். எய்ட்ஸ் தொற்றுக்கு உட்பட்டவர்களில் கணிசமானவர்கள் 15 தொடக்கம் 25 வயதுக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

வவுனியா மருத்துவமனையில் அமைந்துள்ள பாலியல்நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு பிரிவில் பொதுமக்கள் தாமாக முன்வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களது இரகசியம் பாதுகாக்கப்படும் - என்றார். (அ-ம-110)

## திஸ்ஸ...

மாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் கையளிக்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாதிக்கப்பட்ட பொது மக்களுடன் இணைந்து மாதாமாதம் போராட்டம் நடத்தி வருகின்றது.

இந்த மாதத்துக்கான தொடர் போராட்டம் இன்று மாலை ஆரம்பித்து நாளைவரை இடம்பெறவுள்ளது. இன்று புதன்கிழமை மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரையும், பௌர்ணமி நாளான நாளை வியாழக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையும் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பொதுமக்கள், அனைத்துக் கட்சியினர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-ம-66-26)

## மக்களுக்கு...

வலருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரைத் தொடர்ந்து, வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் மத்தி மற்றும் சுன்னாகம் மேற்கு வட்டார உறுப்பினர் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றி இடைத்தங்கல் முகாமொன்றில் அமர்த்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை அவரே மக்களுக்குத் தேவையான உணவையும் ஏற்பாடு செய்து வழங்கியுள்ளார்.

எனினும், அந்தப் பகுதி கிராம அலுவலர் தன்மூலமாகவே உணவுப் பொருள்களும், நிவாரணப் பொருள்களும் வழங்கப்பட வேண்டும் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதேசசபை உறுப்பினரிடம் கூறியுள்ளார். இதையடுத்து, 'அந்தப் பகுதி மக்கள் எனக்கு வாக்களித்தவர்கள். எனவே, அவர்களை நெருக்கடிக்குள் விட முடியாது. அத்துடன், என்னை நம்பியே அவர்கள் இந்த இடைத்தங்கல் முகாமுக்கு வந்தனர். எனவே, நீங்கள் உணவு கொடுப்பதாயின் கொடுங்கள். ஆனால், உரிய முறையில் பணிகள் இடம்பெறாவிடில் நான் உணவு கொடுப்பேன்' என்று அந்தப் பிரதேசசபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அந்தக் கிராம அலுவலரால் பொதுமக்களிடம் சமைத்து உண்பதற்காக உணவுப் பொருள்கள் 11 மணியளவில் வழங்கப்பட்டுள்ளன. 11 மணிக்குக் கிடைத்த பொருள்களை வைத்து உணவு தயாரிக்க தாமதமாகும் என்பதால், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி நேற்றுமுன்தினமும் பிரதேசசபை உறுப்பினரால் சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே, அந்தக் கிராம அலுவலருக்கும் பிரதேசசபை உறுப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், வாக்குவாதத்தின் தொடர்ச்சியாக, 'அரச கடமைக்கு இடையூறு' என பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்குவேன் என்று அந்தக் கிராம அலுவலர் பிரதேசசபை உறுப்பினரை எச்சரித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது. (அ-ம-26)

## பாகிஸ்தானின்...

மாகவும் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறிருக்கையில் பாகிஸ்தான் முன்வைத்த குற்றச்சாட்டு மிகவும் அபத்தமானது என்பதுடன், அந்தத் தகவல்கள் தவறான தகவல்களாகவும் காணப்படுகின்றன என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார். (அ-ம)

## மனிதாபிமான...

வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

பேரழிவில் சிக்கியுள்ள இலங்கைக்கு அனைத்து வகைகளிலும் உதவியாய் இருப்பது எங்களின் பிரதான கடமையாகும். ஆனால், பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்குச் செல்லும் மனிதாபிமான உதவிகளை இந்தியா தொடர்ச்சியாகத் தடுத்து வருகின்றது.

பாகிஸ்தானின் மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு எடுத்துச் செல்லும் சிறப்பு விமானம், இந்திய வான்வெளியைப் பயன்படுத்துவதற்காக 60 மணிநேரத்துக்கும் மேலாகக் காத்திருக்கின்றது. இந்தியாவிடம் எமால் கோரிக்கை விடுக்கப்பட்டு 48 மணி நேரத்தின் பின்னர் நேற்றுமுன்தினம் இரவு குறுகியகால அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்த அனுமதி செயற்பாட்டு ரீதியாக நடைமுறைக்கு முரணானது.

எனவே, இலங்கையில் உள்ள உறவுகளுக்கு பாகிஸ்தானின் உதவிகள் சென்றடைவதற்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## நாடாளுமன்றத்தில்...

விணங்கள் தொடர்பில் இன்று விவாதிக்கப்படவுள்ளன.

பேரிடர் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, நான்கு அமைச்சகங்களின் செலவின தலைப்புகள் விவாதம் இல்லாமல் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

வேலைவாய்ப்பு

யாழ் நகரில் காட்வெயர் கடைக்கு வகுப்பு வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-

074 226 2271

(CS/30813) J-1

றோயல் அக்கடமி

ROYAL ACADEMY

வைமன் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ். நகர்.

புதிய கல்வியாண்டு - 2026

தரம் 6

தமிழ்மொழி மூலம்

English Medium

ஆரம்பம் 04.12.2025 வியாழக்கிழமை காலை 7.45 மணி

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T. சிங்களம், முயற்சியாண்மை

ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!

குறிப்பு : ● மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும். (புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும்.)

● ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர - ஆசிரியர சந்திப்பு இடம்பெறும்.

- இயக்குநர் -

(18425)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.